பக்கங்கள்: 14 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 05 சனிக்கிழமை 19.06.2021 கதிர் 226

## இனி இது ரகசியம் அல்ல!

ரணில் நாடாளுமன்றுக்கு வருகின்றார், வந்ததும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பிளக்கும் என்றெல்லாம் ஆளும் தரப்பு ஆரவாரம் காட்டியது. ஆரூடம் சொன்னது. ஆனால் பிரிவும், பிளவும் ஆளும் தரப்புக்குள்தான் வரும் போன்று பக்கம்02 »

# சதி மூலம் அதிகரித்துக் காட்டப்பட்டது கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கை

## ஜூன் 21 வரை பயணத் தடை நீடிக்க அதுவே காரணம் என்கிறார் கோட்டா



பிழையான தரவுகள் மூலம் கொரோனா மரண எண்ணிக்கை ஜூன் மாதம் 11ஆம் திகதியன்று நூற்றுக்கும் மேல் அதிகரித்துக் காட்டப்பட்டது. இந்தத் தரவுகளை நம்பியே ஜூன் 14ஆம் திகதி பயணத் தடையைத் தளர்த்தாமல் ஜூன் 21ஆம் திகதி வரை நீடித்தோம். கொரோனா மரண எண்ணிக்கையிலும் சதி இடம்பெறுகின்றது. இதற்கு இனிமேல் இடமளியோம்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். ☞2

## பயணக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவது பேராபத்து; எங்கள் கருத்துக்குச் செவிமடுக்க வேண்டும் அரசு

### கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் சுகாதார நிபுணர்கள் வலியுறுத்து

நாட்டை முடக்கி கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ள சூழலில் பயணக் கட்டுப்பாட்டை தளர்த்துவது பேராபத்தானது என சுகாதார நிபுணர்கள் கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

அத்தோடு, வைரஸ் தொற்று வேகமாக பரவக்கூடிய அச்சுறுத்தல் உள்ளது எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் தற்போது அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாடுகள் எதிர்வரும் 21ஆம் திகதி தளர்த்தப்படும் என அரசு அறிவித்துள்ள நிலையிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸின் மிக மோசமான தொற்றாகக் கருதப்படுகின்ற பி.1.617.2 என அடையாளப்படுத்தப்படும் ☞2

## மாங்குளம் பெண் கைது

பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை உள்ளிட்ட போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து கட்டார் ஊடாக பிரான்ஸ் செல்ல முற்பட்ட பெண்ணொருவர் குடிவரவு – குடியகல்வு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாங்குளம் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார். ☞14

## நாட்டின் தலைமை மாற வேண்டும்; புதிய தலைவரைத் தேடுகின்றோம்

### முருந்தெட்டுவே தேரர் அதிரடி



நாட்டை நேசிக்கும் – நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய எதிர்கால மக்கள் தலைவனைத் தேட வேண்டும் என்று வண. முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

நாரஹன்பிட்டியவில் உள்ள அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வயிற்றை நிரப்ப மக்கள் தங்கள் பெல்ட்களை இறுக்கச் சொன்ன தலைவர் ☞2

## அதிகரிக்கும் தொற்றாளர்கள்; நேற்று 2,327 பேர் அடையாளம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 327 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 35 ஆயிரத்து 391 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 259 ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்று காரணமாக வைத்திய சாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் ☞2

## குடாநாட்டில் விதி மீறி கல்யாணம்; கைவரிசை காட்டியது கொரோனா

### இதுவரை 13 பேருக்குத் தொற்று

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா விதிகளை மீறி இடம்பெற்ற திருமண நிகழ்வில் கலந்துகொண்ட 13 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. ☞14

## கஞ்சாவுடன் இருவர் கைது

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை கரம்பன் பகுதி கடலூடாக படகில் கேரளா கஞ்சாவைக் கடத்தி வந்த இருவரை கடற்படையினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

மன்னார் – பேசாலை ☞2

## யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 56 பேர் உட்பட வடக்கில் 76 பேருக்கு தொற்று

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் நேற்று 76 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகம், யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 56 பேர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

அதேவேளை, ☞2

## ரணில் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்தல் ஆணைக்குழு பச்சைக்கொடி

### வெளிவந்தது விசேட வர்த்தமானி



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அறிவிக்கும் விசேட வர்த்தமானி நேற்று வெளியாகியுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக் ☞14

## மேலும் 55 பேர் பேரை சாகடித்த கொரோனாப் பெருந்தொற்று!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 55 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 23 பெண்களும், 32 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 480 ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தென்படுகின்றது என நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். வாசகர்களுக்கு நினைவு இருக்கும்.

பிளவும், பிரச்சினையும் ஆளும் தரப்பில் மட்டுமல்ல, ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும்தான் என்பது இப்போது வெட்டவெளிச்சமாகியிருக்கின்றது.

நாட்டை மாறி மாறி ஆண்டு வந்த தரப்பு ஐக்கிய தேசிய கட்சி. சுதந்திர இலங்கையில் முதலில் ஆட்சி அதிகாரத்தைப் பெற்று அரசமைத்தது அந்தக் கட்சிதான். அது இந்தப் பொதுத் தேர்தலில் தேசியப் பட்டியல் மூலம் அரும்பொட்டில் ஒரேயொரு ஆசனத்தை மட்டும் பெறும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டது

அந்த ஓர் எம்.பி. பதவி கட்சிக்குள் பெரும் கலகத்தை உண்டு பண்ணி விட்டது.

'கழுதை தேய்ந்து கட்டுடெறும்பான கதையாகி விட்ட' ஐக்கிய தேசியக் கட்சியை இந்த எம்.பி. பதவி மேலும் சின்னாபின்னப் படுத்தி விட்டது. கட்சியில் எஞ்சியிருந்த ஓரிருவரையும் கட்சியை விட்டுக் கலைக்கும் வேலையைத்தான் அது செய்திருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் – யு.என்.பிக்குள் – ஆரம்ப காலம் தொட்டே குடும்ப வாரிசுப் போக்கு இருந்தது. டி.எஸ்.சேனநாயக்கா, அவர் மகன் டட்லி சேனநாயக்கா, டட்லியின் பெறாமகன் ருக்மன் சேனநாயக்கா என்று ஒரு குடும்ப சகாப்தம். ஜே. ஆர்.ஜெயவர்த்தனா, மருமகன் ரணில் விக்கிரமசிங்க என்ற தொடரில் இப்போது ரணிலின் மருமகன் ருவன் விஜேவர்த்தனா. இதை விட முன்னர் ரணசிங்க பிரேமதாஸ – சஜித் பிரேமதாஸ என்ற ஒரு குடும்ப வாரிசு.

இதனால் UNP என்பதை United National Party என்பதற்குப் பதிலாக Uncle Nephew Party (மாமா – மருமகன் கட்சி) என்று சொல்வதுண்டு.

அந்தச் பெயரை நிஜமாக்க விரும்பினார் ஜே.ஆரின் மருமகனான ரணில் விக்கிரமசிங்க.

டட்லி சேனநாயக்கா தமக்குப் பிள்ளைகள் இல்லாதமையால் பெறாமகன் ருக்மன் சேனநாயக்காவை முன் தள்ளினார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மருமகன் ரணிலை வாரிசுரிமைக்கு விட்டுச் சென்றார்.

மாமன் – மருமகன் கட்சி என்ற நிலைப்பாட்டை உறுதிப்படுத்த கடந்த பொதுத் தேர்தலில் ரணில் ஒரு வேலை செய்தார்.

ஐ.தே.கவையும் ரணிலின் தலைமையையும் கைவிட்டு சஜித் பிரேமதாஸாவும் ஏனையோரும் தனிவழி போனதும் தனது கட்சியின் நிலைமை ரணிலுக்கு விளங்கி விட்டது. மாவட்டத்து ஓரிரு இடங்கள் தேறுவதே கஷ்டம் என்று புரிந்து கொண்டார். எப்படியும் தமது மருமகன் ருவன் விஜேவர்த்தனா வென்று எம்.பியானால்தான் கட்சி வாரிசுரிமையை அவருக்கு வழங்க முடியும் என்பதை உணர்ந்து கொண்ட ரணில் – ருவான் விஜேவர்த்தனா போட்டியிடும் கம்பஹா மாவட்டத்தின் நிலைமைகளைப் பரிசீலித்தார். அங்கு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான – அதுவரை அமைச்சராக இருந்த – ஜோன் அமரதுங்க இருக்கின்றார். போட்டியிட்ட எந்தத் தேர்தலிலும் தோற்காதவர் அவர். கட்சியின் சிரேஷ்ட நிலையில் இருக்கும் அவர் அங்கு போட்டியிட்டால் அவர்தான் முதன்மை வேட்பாளர். கட்சியில் ஆகக் கூடிய விருப்பு வாக்கு அவருக்குத்தான் கிட்டும். மருமகன் ருவான் விஜேவர்த்தனா இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுவார். அப்படிப் போனால் கட்சித் தலைமையை ருவானுக்குக் கையளிப்பது கஷ்டமாக இருக்கும் எனக் கணக்குப் போட்டார் ரணில்.

அதனால் ஜோன் அமரதுங்கவை அழைத்தார். *"நீங்கள் இந்தப் பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டாம், தேசியப் பட்டியலில் முதலிடம் உங்களுக்குத்தான், கட்சிக்குக் கிடைக்கும் தேசியப் பட்டியலில் உங்களுக்குப் பிறகுதான் மற்றவர்களுக்கு இடம்"* – என்று கதையளந்தார்.

தேசியப்பட்டியலிலும் முதலாவது பெயராக ஜோன் அமரதுங்கவின் நாமம்தான் குறிப்பிடப்பட்டிருந்து.

இப்போது பொதுத் தேர்தலில் படுதோல்வி. ஏற்கனவே செய்யப்பட்ட கனவான் உடன்பாட்டின்படி தேசியப் பட்டியலில் கிடைத்த அந்த எம்.பி. பதவி ஜோன் அமரதுங்கவுக்குத் தரப்பட வேண்டும்.

அதற்கு இடையில், தேர்தல் முடிந்த சமயத்தில் கட்சியின் செயலாளராக இருந்த – ரணிலின் வலதுகரமான – அகில விராஜ் காரியவசம் அந்தத் தேசியப்பட்டியல் எம்.பி. பதவி தனக்கே என்றார். அப்படித் தம்மை எம்.பியாக உறுதிப்படுத்தும் ஒரு கடிதத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் கட்சிச் செயலாளர் என்று எழுதினார்.

அதை அறிந்த ரணில் விக்கிரமசிங்க அதில் தலையிட்டார். கட்சி செயற்குழுவின் அங்கீகாரமில்லாமல் அவ்வாறு தனிப்பட்ட நபர்கள் அனுப்பும் கடிதத்தை ஏற்க வேண்டாம் எனத் தேர்தல்கள் ஆணையத்தை எழுத்தில் கோரினார். ஆணையம் அதனை ஏற்றுக் கொண்டது.

தம்மை மீறித் தன்பாட்டில் தேர்தல் ஆணையத்துக்குக் கடிதம் எழுதிய அகில விராஜ் காரியவசத்தை கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து தூக்கினார் கட்சித் தலைவர் ரணில்.

2015 பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி நல்லாட்சி அரசு அமைத்த போது இப்படி ஐ.தே.கட்சியில் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனங்களுக்குப் போட்டி வந்தது.

அப்போது கொழும்பு மாவட்டத்தில் அதிக வாக்குகள் பெற்று நாடாளுமன்றுக்குச் சென்றிருந்த ரணில் விக்கிரமசிங்க ஓர் அறிவித்தல் விடுத்தார். நாடாளுமன்றத் தேர்தலில் மாவட்ட ரீதியாகப் போட்டியிட்டு தெரிவு செய்யப்படாதவர்களுக்கு – தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கு – கட்சியில் தேசியப் பட்டியல் நியமனம் வழங்கப்படமாட்டாது. இது கட்சியின் தேசிய கொள்கை ரீதியான தீர்மானம் என்று பிரகடனப்படுத்தினார் அவர்.

இப்போது மாவட்ட ரீதியில் – கொழும்பு மாவட்டத்தில் – போட்டியிட்டு எம்.பி. பதவிக்கு தெரிவாகாமல் தோற்ற ரணில் விக்கிரமசிங்கதான் இப்போது தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தைத் பெற்றுக் கொள்கின்றார்.

இது, அவர் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்சியின் தீர்மானம் என்று அறிவித்த கொள்கை நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறானதாகும்.

'தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்குமாம்' என்பார்கள். தனக்கு என்றதும் கட்சியின் கொள்கை நிலைப்பாட்டையே மாற்றி அமைக்கும் ரணிலின் போக்கு இப்படிப் பட்டதுதான்.

இந்த நியமனத்தைத் தமக்குப் பெற்றுக் கொண்டமை மூலம் கட்சியில் எஞ்சியிருந்த மூத்த தலைவரான ஜோன் அமரதுங்க, கட்சியின் முன்னாள் செயலாளர் அகில விராஜ் காரியவசம் போன்றவர்களின் பங்களிப்பையும் கட்சி இழப்பதற்கு வழி – வசதி – செய்து கொடுத்திருக்கின்றார் ரணில்.

ரணிலின் இந்த எம்.பி. நியமனம், நொந்து, நூலாகி, சர்ச்சையில் கிடக்கும் கட்சியை நிரந்தரமாக காணாமலாக்கச் செய்தாலும் செய்துவிடும்.

ரணில் மிகத் தந்திரமாக நடக்க வேண்டிய காலம் இது. நடப்பாரா? பார்ப்போமே!

– மின்னல் –

## நாட்டின் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டுக்குப் பயனற்றவர். புதிய தலைவர் நாட்டில் உள்ள சொத்துக்களை விற்கும் நபராக இருக்கக்கூடாது.

அதன்படி, நாட்டை முன்னோக்கி நகர்த்த சிறந்த தலைவர் யார் என்பது குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன – என்றார்.

## சதி மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனா ஒழிப்புக்கான விசேட குழு, நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் கூடியபோதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

ஜூன் 21ஆம் திகதி முதல் நாடு முழுவதும் அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாடுக ளைத் தளர்த்தினாலும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தாதிருக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், தொடர்ந்தும் அதேபோன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இதன்போது, கொரோனா அல்லாத மரணங்களை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்துவதால், இறுதிக் கிரியைகளை நடத்துவதில் ஏற்படும் தாமதங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதன் மூலம், உயிரிழந்தவரின் குடும்ப உறுப்பினர்கள் முகங்கொடுக்கும் பொருளாதார மற்றும் ஏனைய கஷ்டங்களைக் கருத்தில்கொண்டு, கொரோனா காரணமாகவன்றி வேறு காரணங்களில் மரணிக்கின்றவர்களின் இறுதிக் கிரியைகளை 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்வதற்கு அனுமதியளிக்குமாறு, ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

நாட்டில் விதிக்கப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகளை, ஜூன் மாதம் 14ஆம் திகதியன்று தளர்த்துவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், ஜூன் மாதம் 11ஆம் திகதியன்று, 101 மரணங்கள் பதிவானதாகக் கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில், ஜூன் 21 வரை பயணக் கட்டுப்பாடுகளை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதன்போது, குறித்த மரணங்கள் ஏற்பட்டுள்ள விதம் பற்றி சுகாதார மற்றும் புலனாய்வுத்துறையின் ஊடாக மீண்டும் விரிவாக ஆராயப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் குறித்து, ஜனாதிபதி விளக்கினார்.

சில மரணங்கள் பெப்ரவரி 6 முதல் ஜூன் 11ஆம் திகதி வரையான 4 மாதக் காலப்பகுதியில் பதிவாகி, மரணச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டிருந்தமை தெரிய வந்துள்ளது. சில மரணங்கள் பற்றிய தகவல்கள், இரண்டு முறை பதிவிடப்பட்டிருந்தமையும் கண்டறியப்பட்டது.

ஜூன் 11ஆம் திகதி இடம்பெற்ற மரணங்களின் எண்ணிக்கை, 15 மட்டுமே ஆகும். இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணைகளின்போது, 101 மரணங்கள் அன்றைய தினம் பதிவாகவில்லை என்பது தெரியவந்தது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதனால், தரவுகளை வெளியிடும் போது சரியானவையாகவும் இற்றைப்படுத்தப்பட்டவையாகவும் இருப்பது, தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமாகும் எனவும் உரிய அதிகாரிகளிடம் அவர் சுட்டிக்காட்டினார்.

## அதிகரிக்கும் தொற்றாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 652 ஆக அதிகரித்துள்ளது.

## யாழ்.மாவட்டத்தைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிளிநொச்சி மாவட்டத்தில் 03 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 07 பேரும், வவுனியா மாவட்டத்தில் 06 பேரும், மன்னார் மாவட்டத்தில் 04 பேரும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## பயணக் கட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவில் பரவும் 'டெல்டா' வைரஸ் பரவல் இலங்கையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது குறித்த விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று சுகாதார, வைத்திய நிபுணர்கள் நேற்றுக் கூடிய கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் தெரிவித்துள்ளனர்.

பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட வேண்டும் என்பதற்கு அரசிடம் இருக்கும் ஒரே சாட்டு நாட்டின் பொருளாதார நெருக்கடி என்ற காரணி மட்டுமே. அதனை நாம் நிராகரிக்கவில்லை. ஆனால், மக்களின் உயிர் பாதுகாப்பு என்பது நாட்டின் பொருளாதார நெருக்கடியை விடவும் முக்கியமானது. இப்போது பயணக் கட்டுப்பாட்டை தளர்த்துவதால், கொரோனா வைரஸ் தொற்று மிக வேகமாகப் பரவ இரண்டு நாள்கள் போதுமானதாக இருக்கும். எனவே, நிலைமைகளைப் புரிந்துகொண்டு எமது கருத்துக்குச் செவிமடுக்க வேண்டும் எனவும் சுகாதார நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## கஞ்சாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் அனலைதீவு பகுதிகளைச் சேர்ந்த 26 மற்றும் 31 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்

இருவரிடமிருந்தும் 4 கோடி ரூபா பெறுமதியான 130 கிலோ 760 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டது எனவும், கைதுசெய்யப்பட்ட இருவரும் ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர் எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



# சிறுபிள்ளையின் கடிதம் போல் பல பிழைகளை நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுள்ளது




## உதய கம்மன்பில நக்கல்

தனக்குஎதிரானநம்பிக்கையில் லாப் பிரேரணை சிறு பிள்ளையின் கடிதம் போல் பல பிழைகளை கொண்டுள்ளது என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

‘நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டின் படியே எரிபொருள் விலையை அதிகரிக்க முடியும். அமைச்சரவையின் அனுமதி தேவை இல்லை.

நான் அமைச்சராக பதவியேற்றது 2020 ஓகஸ்ட் மாதம். 2020 ஜனவரி மாதம் அல்ல என்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இந்தசந்தர்ப்பத்தில்ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இதில் கைச்சாத்திட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சட்டம் தொடர்பில் ஒன்றும் தெரியாது என்பது இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லா பிரேரணை என்ற பெயரில் நம்பிக்கை பிரேரணை ஒன்றை கொண்டு வந்ததற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா டெங்கு நோய் அறிகுறிகள் ஒரேமாதிரியானவையாகவும் இருக்கலாம்

டெங்கு மற்றும் கொரோனாத் தொற்று ஆகியவற்றுக்கான நோய் அறிகுறிகள் ஒரே மாதிரியானவையாகக் காணப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர், வைத்தியர் அநுர ஜயசேகர இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

குறித்த நோய் அறிகுறிகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதுடன், உரிய வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடையவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எதிர்வரும் வாரங்களில் டெங்கு நோய் மேலும் அதிகரிக்குமெனவும் வைத்தியர் அநுர ஜயசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்மைச் சூழவுள்ள பகுதிகளை சுத்தமாக வைத்திருப்பது பொது மக்களின் பொறுப்பாகுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 28 ஆயுர்வேத வைத்தியசாலைகளை கொவிட் சிகிச்சைக்கு பாவிக்க முடிவு

கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக 28 ஆயுர்வேத வைத்தியசாலைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மருத்துவ ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சால் இது தொடர்பான தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் யாழ். கைதடி, பொரளை, அம்பாந்தோட்டை மற்றும் நாவின்ன ஆயுர்வேத வைத்தியசாலைகளும் இவற்றில் அடங்குகின்றன என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஏனைய 24 ஆயுர்வேத வைத்தியசாலைகளும் மாகாண சபைகளால் நிர்வகிக்கப்படுகின்ற வைத்தியசாலைகளாகும்.

# பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கு வீடுதேடி நிவாரணம் வழங்கும் எம்.பி.



**பைல் இஸ்மாயில்**

கொவிட் – 19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நடவடிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரபின் வழிகாட்டலிலும், பங்களிப்பிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்பால் ஆரம்பிக்கப்பட்ட அனர்த்த நிவாரண நிதியத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்த நிவாரணம் வழங்கும் நடவடிக்கை செயற்திட்டம் அம்பாறை மாவட்டத்தில் கொவிட் 19 பெருந்தொற்றின் மூன்றாம் அலையில் பாதிக்கப்பட்டு அவதிப்படும் மிக வறிய குடும்பங்களுக்கு வழங்கி வருகின்றார்.

தேசிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸின் வேண்டுகோளுக்கு அமைவாக, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக முதலாம் கட்ட நிவாரணப் பொதிகள் நேற்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் வை.எல். நியாஸ், காரியால உத்தியோகத்தர் ஜஸ்வத் இலாஹி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு இந்த நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தனர்.




# வெருகல் பிரதேச மாற்றுத்திறனாளிகளுக்கு கனடா அமைப்பால் உலருணவுப் பொதிகள்

வெருகல் பிரதேச செயலாளரது வேண்டுகோளுக்கு அமைய, அப்பிரதேச செயலாளர் பிரிவில் கொவிட் 19 தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கும் பொருட்டாக 3 லட்சத்து 72 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன .

கனடாவில் இயங்கும் ‘மண்வாசனை’ அமைப்பானது இந்த இடருதவி வழங்கலுக்கான நிதி உதவியைத் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் ஊடாக வழங்கியது.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் நேற்று (வெள்ளிக்கிழமை) 3 லட்சத்து 72 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான மேற்படி உலர் உணவுப் பொருள்களை வெருகல் பிரதேச செயலாளர் குமாரசிங்கம் குணநாதனிடம் கையளித்தார்.

மேற்படி உலர் உணவுப் பொருள்கள் உடனடியாக வெருகல் பிரதேச செயலக இடர் முகாமைத்துவத் துறை அலுவலர்களாலும் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தொண்டர்களாலும் மாற்றுத் திறனாளிகளது வதிவிடங்களுக்கு அண்மையில் எடுத்துச் சென்று அவர்களுக்கு வழங்கப்பட்டன.

# யாழ். சுழிபுரம் பகுதியில் மோட்டார் ஷெல் ஒன்று மீட்பு



யாழ்ப்பாணம் – சுழிபுரம், வறுத்தோலையில் மோட்டார் ஷெல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

கடந்த வியாழக்கிழமை சுழிபுரம், வறுத்தோலையிலுள்ள வெற்றுக் காணி ஒன்று, ஜே.சி.பி. இயந்திரம் ஊடாக துப்புரவு செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களால் வெடிகுண்டு இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

அதன்பின்னர் ஜே.சி.பி. இயக்குநர், காணி உரிமையாளருக்கு சம்பவம் தொடர்பாக தகவல் வழங்கியமையைத் தொடர்ந்து அவர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்தினார்.

இந்நிலையில் வெடிகுண்டை மீட்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கிய பின்னரே அந்த இடத்தில் இருந்து அகற்றுவதற்குநடவடிக்கைமேற்கொள்ளப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தொற்றைத் தடுப்பதில் பின்னடைவு

*"நோய் நாடி நோய் முதல் நாடி – அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்."*

– என்றான் செந்நாப் போதகன், பொய்யாமொழிப் புலவன் திருவள்ளுவப் பெருந்தகை.

நோய் என்ன, நோய்க்கான காரணம் என்ன, நோய் தீர்க்கும் வழி என்ன என்று இவற்றை ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும் என்றான் அவன்.

ஆனால் கொரோனாத் தொற்றுப் பேரிடர் எனும் பெரும் நோயைக் கையாள்வதற்கு வள்ளுவனின் இந்த வழிகாட்டலை இலங்கை அரசு கிஞ்சித்தும் கணக்கெடுத்ததாகத் தெரியவில்லை.

கொரோனா வைரஸ் பரம்பல் மற்றும் தொற்றுத் தொடர்பாக உலகின் மருத்துவ விஞ்ஞான அறிவின் உச்சியில் இருக்கும் பல்கலைக்கழகங்கள், நிபுணர்களில் தொடங்கி நாடுகள் வரை எல்லாத் தரப்புகளுமே ஆழ ஆராய்ந்து அது பற்றிய அறிவைப் பெருக்கிக் கொண்டுள்ளன. இந்தத் தீநுண்மியைக் கையாளும் வழி வகைகளை தீவிரமாக ஆராய்ந்து கண்டறிந்துள்ளனர்.

கொரோனா வைரஸுக்கு எதிரான சக்தியை மனித உடலில் பெருக்கிக் கொள்வதே இதற்கு எதிரான மனிதனின் போராட்டத்தில் மிக முக்கிய அம்சம் என்ற தீர்மானத்துக்கு வந்தமையை அடுத்து, இந்த வைரஸ் பாதிப்பால் உயிரிழக்கக் கூடிய ஆபத்துள்ள தரப்பினருக்கு முதல் கட்டமாகவும், ஏனையோருக்கு அடுத்தும் கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்துவதில் சர்வதேச சமூகம் முனைப்பாக நிற்கின்றது.

முதலில் நாடுகள், பிரதேசங்களை முடக்கி, கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த வேண்டும். தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய சிகிச்சைகளை வழங்குவதற்கு, பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை எகிறாமல் பார்க்க வேண்டும். இல்லையேல் நோயாளிகளைக் கையாளும் மருத்துவ சேவையே அடியோடு சிதைந்து விடும். எனவே முதலில் நாட்டை – பிரதேசங்களை முடக்கி – கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு, ஒரே சமயத்தில் அதிக எண்ணிக்கையான மக்களுக்கு – இயன்ற விரைவில் – தடுப்பூசியை ஏற்றி, இயல்பாகவே மக்களின் உடலில் கொரோனாவுக்கு எதிரான காப்பரணை வலிமையடையச் செய்ய வேண்டும்.

இதன் மூலம், கொரோனாவுக்கு எதிரான சமூகக் காப்பரண் உறுதியானதும், பொது முடக்கத்தை – பிரதேச முடக்கத்தை – மெல்ல மெல்லத் திறந்து விட வேண்டும்.

இதுதான் மேலைத் தேசங்களில் – கொரோனா நெருக்கடியை சிறப்பாகக் கையாண்ட நாடுகளில் – பின்பற்றப்பட்ட, பின்பற்றப்படுகின்ற ஒரே நடைமுறை.

நோய் முதல் நாடி அதைத் தணிக்கும் செயல் என்று வள்ளுவன் காட்டிய வழி இதுதான்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் அமெரிக்க ஜனாதிபதிப் பதவியிலிருந்து டொனால்ட் ட்ரம்ப் இறங்கிய போது கொரோனாத் தொற்றினால் துவண்டு போய்க் கிடந்த அமெரிக்க தேசத்தை, புதிதாகப் பொறுப்பேற்ற ஜோ பைடனின் நிர்வாகம், கொரோனாப் பிடியிலிருந்து இன்று ஓரளவு மீட்டெடுத்தது இந்த வழியில்தான்.

ஆனால், கொரோனாப் பெருந்தொற்றுக்கு எதிராக மக்களிடம் வலுவான காப்பரணை ஏற்படுத்துவதற்கான வழிவகை தெரியாமல் தடுமாறுகின்றது கோட்டா நிர்வாகம்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி இயப்பு நிலையை விரைந்து மீளக் கொணர்வதற்கு மிக முக்கியான விடயம், இந்தத் தொற்றால் பாதிக்கப்படக் கூடிய மக்கள் கூட்டத்தின் அனைவருக்கும் தடுப்பூசிகளை விரைந்து ஏற்றுவதாகும்.

அந்த விடயத்தை சரிவர முன்னெடுக்க முடியாது தடுமாறுகின்றது கொழும்பு ஆட்சிப் பீடம் என்பது வெளிப்படையானது.

ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் நாம் சுட்டிக் காட்டியபடி, தடுப்பூசிகளை விரைந்து பெறுவதற்கு இரண்டு விடயங்கள் அவசியமானவை.

ஒன்று – போதிய நிதி.

அடுத்தது – தடுப்பூசி தயாரிக்கும் பல்வேறு நாடுகளுடனும் சிறந்த இராஜதந்திர உறவாடல்.

இரண்டிலுமே கோட்டா அரசு தடுமாற்றமாகவே இருக்கின்றது. உலக நாடுகளிடம் மேலும் கடன்களைப் பெற்றாலும் கூட, தடுப்பூசி தயாரிக்கும் நாடுகளின் கருணைப் பார்வை கிட்டாவிடின் ஊசிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது.

சர்வதேச உறவாடல் விடயத்தில் அயல் நாடான இந்தியா மற்றும் மேற்கு நாடுகளுடன் முரண்பட்டுக் கொண்டு, சீனாவைப் போய்க் கட்டிப் பிடித்து அண்டி நிற்கின்றது கொழும்பு.

அதனால் தடுப்பூசி விடயத்தில் சீனாவின் கருணைப் பார்வை – அருள் கடாட்சம் – மட்டுமே இலங்கைக்குக் கிடைக்கும் நிலை. சீனா வழங்கும் தடுப்பூசிகள் கூட இலங்கையின் தேவையைப் பொறுத்தவரை யானைப் பசிக்கு சோளப் பொறிதான்.

மக்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் திட்டத்தைச் சரிவர முன்னெடுக்க இயலாத கையாலாகாத்தனத்தில் இருக்கும் கோட்டா ஆட்சிப்பீடம் பயணக் கட்டுப்பாடுளைத் தளர்த்துவதாக அறிவிப்பது அறிவிலித்தனமின்றி வேறில்லை.

## பிரதேசம் மீது அக்கறையற்ற அரசியல்வாதிகள் மணல் கொள்ளையர்களுக்கும் உதவுகின்றனர்

### நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் காட்டம்



அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் மக்களின் வயிற்றில் அடிக்கும் மணல் கொள்ளையர்களுக்கு சில அரசியல்வாதிகள் உதவி செய்து வருகின்றனர். இவர்களின் இவ்வாறான செயற்பாடுகளால் எமது மக்களே பாதிக்கப்படுகின்றனர் என்பதை அவர்கள் மறந்து செயற்படுகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

செங்கலடி பிரதேச சபையின் தவிசாளர், சித்துள் பிரதேச சபை உறுப்பினர்களான வர்ணன், சிவானந்தன் மற்றும் ஊர்மக்களை சந்தித்து பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது குறித்த பகுதி மக்களால் மணல் லொறிகள் இந்த வீதி ஊடாக பயணிப்பதை நிறுத்துமாறு கோரி மனு ஒன்றும் இரா.சாணக்கியனிடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபருடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு – செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கித்துள் பகுதியில் பயணத்தடை காலத்திலும் முன்னெடுக்கப்பட்டுள்ள சட்டவிரோத மண் அகழ்வுகள் காரணமாக மீனவர்கள் மற்றும் விவசாயிகள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கிறோம் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கித்துள் பகுதியில் வடிச்சல் ஆற்றை ஊடறுத்து டிரக்டர் மற்றும் கனரக வாகனங்கள் மூலம் மணல் அகழ்வு இடம் பெறுவதாகவும் இதனால் தமது மீன்பிடி மற் றும் விவசாய நடவடிக்கைபெரிதும்பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்து கித்துள் வடிச் சல் ஆற்றுப்பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மீனவர்கள் மற்றும் விவசாயிகள் எதிர்ப்பு நடிவடிக்கையில் ஈடுபட்டனர்.

சுமார் 30 மீனவர்கள் விவசாயிகள் குறித்த ஆற்றுப்பகுதியில் சமூக இடைவெளியைப் பேணி தமது எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குறித்த ஆற்றை ஊடறுத்து இரவு பகலாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனால் தாம் தொழிலுக்கு ஆற்றைக் கடந்து செல்ல பெரிதும் சிரமப்படுகிறோம் எனவும் ஆற்றுப்பகுதி ஆழமாகி செல்வதாகவும் தெரிவிக்கும் மீனவர்கள் தாம்செல்லும்வீதியும்நாசமாகியுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் தாங்கள் மண் அகழ்வில் ஈடுபடுவோரிடம் ஏதும் கேட்டால் அவர்கள் தங்களை தாக்குகின்றனர் எனவும் மீனவர்கள் கவலை வெளியிட்டிருந்தனர்.

அத்துடன், கடந்த மூன்று வருடங்களாக இந்தபிரச்சினையைஎதிர்நோக்கிவருகிறோம் மீனவர்கள்,விவசாயிகள் குறிப்பிட்டிருந்தனர்.

இந்தநிலையிலேயே இரா.சாணக்கியன் குறித்த பகுதிக்குச் சென்று மக்களுடன் பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அத்தியாவசிய பொருள்கள், சேவைகள் தொடர்பில் புதிய வர்த்தமானி வெளியீடு

பயணக்கட்டுப்பாடு அமுலிலுள்ள காலப்பகுதியில் மக்களின் வாழ்க்கையைத் தொடர அத்தியாவசிய பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்குவது தொடர்பாகப் புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் கட்டளைக்கு அமைவாக வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தலில், அடிப்படை பொருள்கள் மற்றும் 10 சேவைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அவற்றில் துறைமுகங்கள், பெற்றோலிய தயாரிப்புக்கள், சுங்கம் மற்றும் ரயில்வே திணைக்களம் போக்குவரத்து முதலான விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

இவை தவிர, அனைத்து மாவட்ட செயலகங்கள் உள்ளிட்ட நிர்வாகப் பிரிவுகள், மத்திய வங்கி உள்ளிட்ட அனைத்து காப்புறுதி சேவைகளும், கூட்டுறவு சதொச போன்ற மக்களுக்கு உணவுப் பொருள்கள் மற்றும் பிற நுகர்வோர் பொருள்களை வழங்கும் தொடர்புடைய நிறுவனங்களும் இந்த வர்த்தமானி அறிவிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிர்ப்பு சஜித் அணி கினிகத்தேனையில் ஆர்ப்பாட்டம்

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமைக்கு எதிராக கினிகத்தேனையில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர், இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பதாதைகளை ஏந்தியவாறு எதிர்ப்பில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், அரசாங்கம் பொதுமக்களுக்குளிபொருள்நிவாரணத்தை வழங்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

## திருச்சி சிறையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் இலங்கை தமிழ் அகதிகள்



திருச்சி மத்திய சிறைச்சாலையிலுள்ள சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் அகதிகள், தொடர் போராட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்று (வெள்ளிக்கிழமை) 10 ஆவது நாளாகவும் போராட்டத்தை முன்னெடுத்துள்ள அவர்கள், உடனடியாக தங்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழக அரசை வலியுறுத்தியுள்ளனர்.

குறித்த கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

நாம் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளோம்.

இந்நிலையில் எங்களது விடுதலை தொடர்பாகத் தமிழக அரசு எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரை காலமும் மேற்கொள்ளவில்லை.

ஆகவே எங்களை விடுதலை செய்யும் வரைதொடர்ந்துபோராட்டத்தில்ஈடுபடுவோம் என அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த கவனவர்ப்பு போராட்டத்தில் 78 பேர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். வனோஜா

## 25 ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**241.இலங்கையில் முன்பள்ளிக் கல்வியை அறிமுகப்படுத்தியவர் யார்?**

**242.உலகில் 3 ஆவது பெரிய வைரம் எந்த நாட்டில் உள்ளது?**

**243. அடிப்படை அலகுகள் ஏழும் எவை?**

**244. தற்போது கொரோனா பாதிப்பில் இங்கிலாந்து எத்தனையாவது இடத்தில் உள்ளது?**

**245. தற்போது நடைபெறும் உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் தொடர் எத்தனையாவது?**

**246.இலவசக் கல்வியின் தந்தை யார்?**

**247. இலங்கையை ஒல்லாந்தர் ஆட்சி செய்த காலப்பகுதி எது?**

**248.பொது வழங்கி என அழைக்கப்படும் இரத்த வகை எது?**

**249. ஒரு சதுரத்தின் மூன்று பக்கங்களின் கூட்டுத்தொகை அதன் பரப்பளவிற்கு சமன் எனின் சதுரத்தின் மூலை விட்டத்தின் நீளம் யாது?**

**250. உலக சுகாதார அமைப்பு எப்போது கொவிட் - 19 இனை பெருந்தொற்று நோயாக அறிவித்தது?**

பெயர் :- ..................................................
அடையாள அட்டை:- ..................................
முகவரி :- ..................................................
மின்னஞ்சல் முகவரி:- ................................
தொலைபேசி இலக்கம்:- ............................

## 23 ஆவது போட்டிக்குரிய பதில்கள்


221. 1505 - 1658
222.72 kmh-1
223.நியூசிலாந்து
224.2020
225.மார்க்கோணி
226. எக்ஸ் பிரஸ் பேர்ள்
227. வவுனியா பல்கலைக்கழகம்
228. சிறிமாவோ பண்டாரநாயக்கா
229. 1972 மே 22
230. லசித் மலிங்கா

## 17ஆம் திகதி வெளியான 23ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

ஏ.துஷான் - நீர்வேலி - 10சரி
எஸ்.சதுர்ஜினி - அல்வாய் 9 சரி
வை.அபிமாறன் - கரவெட்டி 8 சரி
ஜ.கார்த்திகன் - யாழ்ப்பாணம் 8 சரி
ஜெ.வினோஜன் - குடத்தனை 8 சரி
பி.அர்ச்சிகா 8சரி

# புலம்பெயர் உறவால் 5 லட்சம் ரூபாவுக்கு கைதடியில் 11 பயனாளிகளுக்கு உதவிகள்





**சாவகச்சேரி நிருபர்**

பிரித்தானியா நாட்டில் வதியும் வி.சிவசுமித்திரன் தனது தந்தையின்பிறந்தநாளைமுன்னிட்டு கைதடிப் பகுதியில் பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள 11 பயனாளிக் குடும்பங்களுக்கு பல்வேறு உதவித் திட்டங்களை நல்கியுள்ளார்.

அந்தவகையில் ஏழு பாடசாலை மாணவர்களுக்கு ஒரு லட்சத்து 56 ஆயிரம் ரூபா நிதியில் சைக்கிள்களும், கைதடி - நவபுரத்தில் உள்ள குறை வீடு ஒன்றை முழுமையாகப் புனரமைக்க 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியும், சுயதொழில் முயற்சியில் ஈடுபடும் குடும்பம் ஒன்றுக்கு 55 ஆயிரம் ரூபா பெறுமதியில் நவீன தையல் இயந்திரமும் மற்றும் குடிதண்ணீர் தேவை உடைய இரண்டு குடும்பங்களுக்கு 37 ஆயிரம் ரூபா நிதியில் நிரந்தர குடிநீர்த் திட்டமும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த உதவித் திட்ட கையளிப்பு நிகழ்வுகளில் கைதடி கிழக்கைச் சேர்ந்த வே.விசுவநாதர், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மற்றும் சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் கலைவாணி ஆகியோர் கலந்து கொண்டு உதவித் திட்டங்களைக் கையளித்திருந்தனர்.

அத்துடன் இவ்வாறான உதவித் திட்டங்களை நல்கிய பிரித்தானியா நாட்டில் வதியும் வி. சிவசுமித்திரனுக்கு பிரதேசசபை உறுப்பினர் கலைவாணி நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

# முல்லை மாவட்ட வைத்தியசாலைக்கு மருத்துவக் கருவிகள் அன்பளிப்பு



முல்லைத்தீவு, ஜூன் 19

நாளை பிறக்கும் தந்தையர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் ஆர்க் பிரிண்டிங் சொலுஷன் நிறுவனத்தின் உரிமையாளர் சிதம்பரப்பிள்ளை கந்தசாமியின் முயற்சியில் அவரின் மகன் கந்தசாமி அபிராம் சுமார் ஐந்து லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கருவிகளை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் கையளித்தார்.

அந்த வைத்தியசாலையில் புதிதாக கொரோனாத் தொற்றாளர்களுக்காக அமைக்கப்படும் வைத்திய விடுதிக்கும் தேவையான மொனிட்டர், நெபுலைஸர் உட்பட்ட கருவிகள் அடங்கிய இந்தத் தொகுதியை சி.கந்தசாமி அவர்கள் முல்லைத்தீவு வைத்திய அதிகாரிகளிடம் கையளித்த போது எடுக்கப்பட்ட படம். இந்தப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள உதவிய உற்றார், உறவினர்களுக்கு க.அபிராம் நன்றி தெரிவித்துள்ளார்.

# புதையல் தோண்டிய மூவர் மட்டக்களப்பில் கைதாகினர்

மட்டக்களப்பு - வாழைச்சேனை, ஊத்துச் சேனை பகுதியில் புதையல் தோண்டிய மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் சந்தேகநபர்கள் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய மண்வெட்டி, அலவாங்கு உள்ளிட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஊத்துச்சேனையில் தொல்பொருள் இடமாக அடையாளமிட்ட பகுதியில், சில சந்தேகநபர்கள் புதையல் தோண்டுகின்றனர் என கடந்த வியாழக்கிழமை இரவு, பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றது.

குறித்த தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், புதையல் தோண்டலில் ஈடுபட்ட கொக்கட்டிச்சோலை, மண்டூர், சென்றல்காம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவரை கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 40

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**128.எந்த புத்திஜீவிகளை விடுதலைப்புலிகள் சேர்த்து கொண்டார்கள்?**

உலக வல்லரசுகளின் பார்வையிலும் செய்திகளிலும் ஈழத்தின் போராளிகள் உலகின் மிகப்பெரிய கொரில்லா இயக்கமாகப் பேசப்பட்டு, பின் அதுவே ஒரு தேசத்தின் விடுதலைக்கான இராணுவப் படையாக முழுமையான கட்டமைப்புக்களோடு மிளிர்ந்தது. அதற்குப் பிரபாகரனின் விட்டுக்கொடுக்காத உறுதியும் அவருக்கு அர்ப்பணிப்புடன் துணை நின்ற வேங்கைகளும்தான் காரணம். இவர்களெல்லாம் உலகம் அறிந்திராத ஊர்களின் எங்கோ ஒரு தெருக்கோடியில் இருந்து, அவர்களை அந்த ஊரே அறிந்திராத நிலைமையில் புறப்பட்டு வந்து, பல தினங்கள் உண்ண உணவும் இல்லாது, உறங்கவும் முடியாது, தெருத் தெருவாக அலைந்து, அன்னியப் படுக்கைகளில் தூங்கி, மனதில் சுமந்த ஒரு லட்சியத்திற்காக தங்களையே துறக்க வந்தவர்கள். அவர்களை நெறிப்படுத்தி ஒரு விடுதலைப் படையாக நிமிர்ந்து நின்று, தளர்ந்து விடாது மீண்டும் மீண்டும் உறுதியோடு போராட வைத்தது பிரபாகரனும் அவரது தோழர்களும் செய்த வீர சாகசங்களும் உயிர்தியாகங்களும்தான்.

அப்படியான நெறிமுறைகளுக்கு அந்த இளைஞர்களைத் தொடக்க காலங்களில் எத்தனையோ பண்ணைகளில் அமர்த்தி, அவர்களது விசுவாசம்,திறன், போரிடக் கூடிய மனோபாவம் என்பவற்றை கணக்கிட்ட பின்னரே விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்களாக சேர்க்கப்பட்டனர்.

ஆனால் தொடக்கத்திலிருந்தே பெருந்திரளான மக்களை மையப்படுத்தி, ஓர் அரசியல் கட்சியையும் ஏன் இராணுவ அமைப்பையும் கூட அந்த மக்களின் பலத்திலிருந்து உருவாக்கும் போராட்டங்கள் மட்டுமே உலகத்தில் வெற்றி அடைந்திருக்கின்றன. இதனைப் பிரபாகரனோ அவரது தோழர்களோ அறிந்திருக்கவில்லை. அவர்கள் ஒரு பலமான இராணுவ கட்டமைப்பை உருவாக்கி ஸ்ரீலங்கா பாதுகாப்பு படையினருக்கு சேதங்கள் விளைவிப்பதிலேயே குறியாய் இருந்தனர். ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். என்று சம நேரத்தில் வந்த இயக்கங்கள் ஓர் இடதுசாரித்துவத்தையும் அதனைச் சார்ந்த சில புத்திஜீவிகளை கொண்டிருந்தாலும் மதியுரைஞர் பாலசிங்கம் புலிகளை வந்து சேர்ந்து உள்வாங்கப்படும் வரைக்கும் விடுதலைப் புலிகள் அவ்வாறு இயங்கவில்லை. இராணுவ நடவடிக்கைகளுக்கு ஏதுவானவர்களையே தேடிச் சேர்த்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறவு – முக்கியமாக அமிர்தலிங்கத்துடனான உறவு – ஒரு பிரதான நட்பு சக்தியாகவும், அவர்களும் தாங்களும் உணர்வுகளில் ஒன்றானாலும், ஒரே அரசியலுக்கு வேறுபட்ட மார்க்கங்களையும் வழிமுறைகளையும் கடைப்பிடிப்பவர்களாகக் கருதியே முன்னேறினார்கள்.

இராணுவ வெற்றிகள் பெருக, தமிழ் உணர்வாளர்களும் தேசியவாதிகளும் இவை எல்லாவற்றையும் சிங்கள படைகளுக்கும், இன அடக்குமுறைக்கும் எதிரான பெரு வெற்றிகளாகக் கருதி அங்கீகாரங்கள் தந்து,



தமிழ் மக்களின் எதிர்ப்புணர்வுகளை புதிய பரிமாணத்தில் அலச ஆரம்பித்து, அவர்கள் செய்பவை தமிழீழ லட்சியத்துக்கு அழைத்துச் செல்லும் என்றும், தமிழர் விடுதலைக் கூட்டணி அவர்களை(போராளிகளை) பயன்படுத்திப் பாவிக்கும் என்றும் புத்திகள் சொல்லப்பட்டன. அதனால் இப்படிக்கிடைத்த மக்கள் ஆதரவும்,சமூக புத்திஜீவிகளின் ஆதரவும்,சமூக அங்கீகாரமும் விடுதலைப் புலிகளை மேலும் மேலும் இராணுவக் குழுவாகவே மாற்றி அதே பாணியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்கம் தந்தன.

ஆக,அவர்கள் தேடிச் சேர்த்தவர்கள் என்பதிலும் பார்க்க அவர்களைத் தேடிச்சென்றவர்களே அதிகம்.



ஆனால் இந்திய ஒப்பந்த ஆக்க காலங்களின் பின்னே பரந்த சர்வதேச பார்வை வேண்டும் என்ற சிந்தனை வளர்ந்தது. அதற்கு முன்னர் சில சில உறவுகள் வந்தாலும் அவை பொருட்படுத்தப்படவில்லை.

**129.அதற்காக விடுதலைப் புலிகள் சேர்த்து கொண்டவர்கள் யார்?**

தளபதி கிட்டு லண்டனுக்கு 1990 இல் வந்து தங்கியிருந்த காலங்களில் சந்தித்து பேசிய பலபேரின் தாக்கங்களால் ஒரு விரிவான சர்வதேச அரசியல் பார்வை தேவை என்பதை அவர் புரிந்து கொண்டார். அத்தோடு இவர்களுக்கு வெளிநாட்டிலிருந்து கிடைத்த ஆதரவுகள் அவர்களது இராணுவ நடவடிக்கைகளுக்காகவும் அவற்றின் வெற்றிகளிலுமே தங்கியிருந்தன. புலம்பெயர்ந்து குடியிருந்த சிலர் தங்களது சமூக அங்கீகாரங்களுக்காக, விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களாக இயங்குவதையும் அறிந்து கொண்டார். பலரிடமும் தான் நாடு திரும்பி பிரபாகரனிடமும் மற்ற தளபதிகளிடமும் கலந்து நடைமுறைப்படுத்த திட்டங்கள் வைத்திருந்தார் என்பதைக் குறிப்பிட்டிருந்தார்.

தளபதி கிட்டு,விடுதலைப் புலிகள் இந்தியா பற்றி எடுத்த நிலைப்பாட்டிற்குப் பூரணமாக ஆதரவு தந்தவர். இந்தியா, தங்களது நலனுக்காக இந்த ஒப்பந்தத்தை திணித்ததென்றும், இந்தியா தமிழர்களின் லட்சியத்தையோ அபிலாஷைகளையோ கட்டுப்படுத்தக் கூடாது, முடியாது, ஆகவே அவர்களுக்கெதிராகப் போராட்டம் தொடரப்பட வேண்டும் என்ற கணிப்பில் இருந்தவர்.

சர்வதேச நிலையில் 1987க்கு முன் இந்தியாவே தமிழர்களுக்கு எதிரான அட்டூழியங்களை பிரசாரப்படுத்தி அவற்றைச் சர்வதேச மனித உரிமை மன்றில் நிறுத்தியது.

ஆனால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட மூன்று மாதங்களிலேயே இந்தியா தமிழர்களின் ஒப்புதல் எதுவும் இல்லாது அத்துமீறி, தமிழ் ஈழத்தில் புகுந்து அட்டூழியங்கள் செய்கிறது, அவர்கள் இனப்படுகொலை செய்யப்படுகிறார்கள் என ஐ.நாவிற்கும், மனித உரிமை மன்றத்துக்கும் சர்வதேசத்திற்கும் விடுதலைப் புலிகள் பிரச்சாரங்கள் செய்தனர். இந்திய பிராந்தியத்தில் தம்மை நிலை நாட்டுவதற்கு அமெரிக்காவே விடுதலைப் புலிகளின் பிரச்சாரத்திற்குத் துணை நின்றிருந்தார்கள் என்ற எண்ணம் இந்தியாவிற்கு இருந்துது. ஆகவே சர்வதேசத்தில் இந்தியாவின் பார்வையோ, நடைமுறைகளோ விடுதலைப் புலிகளின் பிரச்சாரத்தை முறியடிப்பதற்காக தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருக்கவில்லை.

ஆகவே தளபதி கிட்டு இந்தியாவிற்கு எதிரான பிரச்சாரங்களுக்கு தங்களுக்கு உதவி தரக்கூடியவர்களையே தேடி அணுகினார்.

1987 இன் ஒப்பந்த ஆக்கத்தின் பின் லண்டனிலிருந்து இயங்கிய தமிழர் தகவல் நிலையம் மூடப்பட்டு அதன் பணிகளை,விஸ்தரித்து சென்னையிலும், புதுடெல்லியிலிருந்தும் இயங்குவதற்காக அதன் இயக்குநர் கந்தசாமி ஸ்ரீலங்கா திரும்பினார். அதற்குப் பொறுப்பாக சென்னையிலிருந்து இயங்கிய பழைய Saturday Review ஆசிரியர் சிவநாயகமும் அங்கு திரும்புவதாக உத்தேசம் இருந்தது. கந்தசாமி கடத்தப்பட்டு கொல்லப்பட்டார். ஆதலால் இந்த உத்தேசங்கள் எல்லாம் கிடப்பில் போடப்பட்டு ஒரு திசை நோக்கில்லாமல் தமழ் மக்கள் போரிலேயே காலம் ஓட்ட வேண்டியிருந்தது. சென்னையிலிருந்த நிலையமும் இந்தியப் புலனாய்வினால் கண் வைக்கப்பட்டது. ஆகவே அதனோடு முன்னரே இணைந்து பணியாற்றிய வரதகுமார் அதனை லண்டனில் மீளத் திறந்து பணியாற்றினார். நடக்கின்ற, தொடர்ந்த மனித உரிமை மீறல்கள் சர்வதேசத்துக்கு அறியத்தரப்பட்டன. வரதகுமார். தளபதி கிட்டுவுக்கு ஒரு நேச சக்தியாக ஐரோப்பியாவில் பலரை சந்திக்கவும்,தொடர்புகள் மேற்கொள்ளவும் உதவினார். வரதகுமார் மூலமாகவும் அவருடன் எனக்கிருந்த பல வருட ஈடுபாடுகளினால் என்னையும் அணுகினார். ஆனால் நாம் இருவரும் எவருடனும் இணைந்தியங்குவதில்லை என்ற எமது கோட்பாட்டினால் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் கிட்டு ஐரோப்பாவை விட்டு வெளியேறும் வரை வரதகுமார் பல விதத்திலும் கிட்டுவிற்கு உதவிகளும், புத்திமதிகளும் செய்தார். புத்திமதிகள் முக்கியமாக விடுதலைப்புலிகளின் சர்வதேச நடப்புகள் மற்றும் அதன் நிர்வாகங்கள் பற்றியவையே.

**130.விடுதலைப் புலிகளின் புலம்பெயர் நிர்வாகங்கள் பற்றி தளபதி கிட்டு அறிந்தவை என்ன?**

முக்கியமாக, புலம்பெயர் தேசங்களில் அவர்களுக்கு ஆதரவாக இயங்குபவர்கள், மண்ணிலுள்ள இராணுவ கட்டுப்பாட்டு முறையிலே நடத்தப்படக் கூடாது என்பதுதான். ஆனால்,புலத்தில் இயங்கியவர்களும் அமைப்பின் எல்லாம் விடுதலைக்காக என்ற ரீதியிலும், நடவடிக்கைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் அதே பாணியில்தான் இயங்கினர். ஜனநாயக ரீதியிலான செயற்பாடோ அன்றில் கணக்குகள் கொடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்போ நிறைவேற்றப்படவில்லை. சுருங்கச் சொன்னால், தகவல்களோ அன்றில் நிதியோ உதவியோ 20 வீதமே போய்ச் சேர்ந்தன. அவற்றை புலிகள் அமைப்பு மண்ணில் தெரிந்து கொள்வது கஷ்டம். ஏனெனில் தகவல்கள் இராணுவ கட்டுக்கோப்புகளின் அல்லது புலனாய்வு அடிப்படைகளில், புலத்தில் அமைப்பின் ஒருவரே மண்ணில் ஒருவரோடு தொடர்பு கொண்டார். மற்றவர் அணுகுவது சாத்தியப்படவில்லை. ஆகவே இவை ஒரு வழியில் எதேச்சாதிகாரத்துக்கு வழி வகுத்தது. அடுத்து புலத்தின் ஆதரவாளர்களிடையே இருந்த போட்டி பொறாமைகள், இவற்றினால் ஏற்பட்ட கோஷ்டி மோதல்கள், பிரிவினைகளை யாராவது பொறுப்பிலிருப்பவரைச் சங்கடத்துக்கு உள்ளாக்கினால், மண்ணில் இருந்து தகவல் வந்தது என்று கேள்வி கேட்பவர் நீக்கப்படுவது எல்லாம் சகஜமாகவும் தான்தோன்றித்தனமாகவும் நடந்து வந்தன.

ஓர் உதாரணத்திற்கு பார்த்தால் கிட்டு லண்டனுக்குச் சென்ற காலங்களில், சாந்தன் அதன் இணைப்பாளராகவும் அவருடைய வட்டம் நிர்வாகிகளாக இருந்தனர். நடேசன் சந்தியேந்திரா லண்டனிலிருந்து இயங்கியவர். அவரை திம்பு பேச்சுவார்த்தைகளுக்காக ரெலோ சார்பில் பங்குபற்ற அழைத்திருந்தோம்.

வளரும்

# நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளனவா? சந்தேகம் எழுப்புகிறார்; விசேட வைத்தியர் பத்மா குணரத்ன



நாட்டில் பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளனவா என்கிற சந்தேகம் ஏற்படுவதாக இலங்கை வைத்தியர் சங்கத்தின் தலைவர் விசேட வைத்தியர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.

அதிகளவான மக்கள் வீதிகளில் நடமாடுகின்றனர் எனவும், தேவையான அர்ப்பணிப்புக்களை மக்கள் செய்யவில்லை என்றால், பயணக்கட்டுப்பாடுகள் எதிர்காலத்தில் தொடர்ந்து அமுல்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளொன்றுக்கு இரண்டாயிரம் தொற்றாளர்கள் இனங்காணப்படுகிறார்கள். இது ஆபத்தான நிலைமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் அலைகளுக்குப் பின்னர் மீண்டும் கொரோனா வைரஸ் அலைகள் உருவாகலாமெனவும், இதனால் மக்கள் பொறுப்போடு நடந்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் கைதான 10 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

மட்டக்களப்பு – கல்குடா கடற்கரையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 10 பேரையும் மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த 10 பேரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த மே மாதம் 18 ஆம் திகதி, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்வதற்கு எதிராக லவக்குமாருக்கு நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது.

ஆனாலும் அவர் உட்பட 10 பேர், நீதிமன்ற தடை உத்தரவை மீறி நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு தீபச் சுடர் ஏற்றி, அஞ்சலி செலுத்தி அதனை முகநூலிலும் பதிவேற்றி இருந்தனர்.

இந்தச்சம்பவம் அறிந்த பொலிஸார், அவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்து, நீதிமன்ற அனுமதியுடன் 3 நாள்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து அவர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் குறித்த சந்தேகநபர்கள் தொடர்பான வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபர்கள் சார்பில், சட்டத்தரணி சுகாஸ் முன்னிலையாகி இருந்தார். ஆனாலும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த முடியாதமையால், எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான், உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'இலங்கை மண்ணின் தோற்றோர்' நூல் ஐந்து மொழிகளில் வெளியீடு



வன்னி மண்ணின் பிரபல்யமான ஆங்கில எழுத்தாளரான யோகராசா அச்சுதனால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 'இலங்கை மண்ணின் தோற்றோர்' எனும்நூல்அண்மையில்ஐரோப்பாவில் வெளியிடப்பட்டது.

ஜேர்மன், பிரெஞ்சு, டச்சு, போர்த்துகீசு, மற்றும் இத்தாலிய மொழி களில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ள குறித்த நூல் உலகின் பிரபல்யமான இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

பிரபல சிங்கள எழுத்தாளரான புண்ணியகாந்தி விஜயநாயக்கவால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 'காத்திருக்கும் பூமி' எனும் நூலை விமர்சித்து எழுதப்பட்ட இந் நூல் சமூக முன்னேற்றத்துக்காக இலங்கை மக்கள் எதிர்கொண்ட தனிமனித மற்றும் சமூகப் பிரச்சினைகளை பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து இலங்கை ஆங்கில இலக்கிய வளர்ச்சிக்கு வலுச்சேர்த்து பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

யோகராஜா அச்சுதன் 'பாழாய்ப் போன வாழ்க்கை','அதிசய குணப்படுத்தல்' மற்றும் 'அப்பாவே ' போன்ற நல்லிணக்கத்துக்கான ஆக்கங்கள் எனும் தொனிப்பொருளில் எழுதப்பட்ட ஆங்கில கவிதைகளின் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாசகர் மனதில் இடம்பிடித்த இலங்கைதமிழ்எழுத்தாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு சலுகைகள் வழங்கப்படும்

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக சிரமங்களை எதிர்கொள்ளும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு சலுகைகள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய சலுகை முறைமைகள் தொடர்பாக அடுத்த வாரம் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பஸ் உரிமையாளர்கள் பொது மக்கள் மீது சுமையை ஏற்படுத்தாத வகையில் சலுகைகளை வழங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் கரை ஒதுங்கிய கடலாமைகள்

### கண்டு கொள்ளாத அதிகாரிகள்

மன்னார் – தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரண்டு கடலாமைகள் பாரிய காயங்களுடன் கரையொதுங்கியுள்ளன.

அண்மையில் இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றிய கப்பலில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆபத்தான பொருள்கள் என சந்தேகிக்கப்படும் சில பொருள்கள் மன்னார் கடற்கரை பகுதிகளில் கரை ஒதுங்கியுள்ளன.

இந்த நிலையில் கடுமையான காயங்களுடன் வியாழன் காலை 2 கடலாமைகள் தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கியுள்ளன.

அவற்றில் ஒரு கடலாமை உயிரிழந்துள்ளதோடு மற்றைய கடலாமை உயிருடன் காணப்படுகின்றது. கடற்படையினர் குறித்த கடலாமைகள் கரை ஒதுங்கியமை தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

எனினும் நீண்ட நேரமாகியும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அந்தப் பகுதிக்கு வராத நிலை காணப்பட்டதோடு, உயிருக்குப் போராடும் கடும் காயங்களுடன் கரை ஒதுங்கிய மற்றைய கடலாமையை மீட்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிய வருகின்றது.

அண்மையில் வங்காலை மற்றும் சிலாபத்துறை கடற்கரை பகுதிகளிலும் கடலாமைகள் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

## மன்னார் கடற்கரையில் ஒதுங்கியவை இந்திய மருத்துவ கழிவுப் பொருள்கள்



மன்னார் – வங்காலை கடற்கரை ஓரங்களில், இந்திய மருத்துவ கழிவுப்பொருள்கள்கரையொதுங்கியுள்ளன என அந்த மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் என்.பவநிதி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு–

வங்காலை கடற்கரை ஓரங்களில் கரையொதுங்கியுள்ள மருத்துவ கழிவுப் பொருள்களுக்கும் கொழும்பில் மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் இருந்து வெளிவரும் கழிவுப் பொருள்களுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.

மேலும் கரையொதுங்கியுள்ள மருத்துவ கழிவுப் பொருள்களை கடற்கரை தூய்மையாக்கள் பிரிவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இவை இந்தியாவின் மருத்துவ கழிவு பொருள்கள் என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதாவது இந்தியாவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிக மழை பெய்து வருகின்றமையால் இவ்வாறான கழிவுப் பொருள்கள் மன்னார் மாவட்ட கடற்கரையோரங்களில் கரையொதுங்குகின்றன.

ஆகவே இந்த விடயத்தில் மீனவர்கள் அச்சம் அடையத் தேவையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தனிமைப்படுத்தல் மீறல் 1,390 பேர் கைதாகினர்

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறும் வகையில் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நேற்றுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் ஆயிரத்து 390பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

சரியான முறையில் முகக்கவசம் அணியாமை மற்றும் மாகாண எல்லைகளைக் கடக்க முயன்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

### வீட்டுத் தோட்டத்திலிருந்து கிடைக்கும் குடும்பத்துக்கு நேரடியாகக் கிடைக்கும் அனுகூலங்கள்

1. குடும்பத்தின் பிரதானமற்ற பல்வேறு போசணைத் தேவைகள் தொடர்ச்சியாகக் கிடைத்தல்.
உ+ம் : வீட்டுத்தோட்டத்திலிருந்து சோறு, பாண் போன்றவை கிடைப்பதில்லையாயினும் தேவையான ஏனைய பல்வேறு உணவுகள் கிடைத்தல்.

2. பிரதான உணவு வேளைக்குரிய பிரதியீட்டுப் பொருள்கள் கிடைத்தல்.இதன்மூலம் உணவுப் பாதுகாப்பு உறுதியாதல்.
உ+ம் : கிழங்கு வகைகள், பலாக்காய்,ஈரப்பலக்காய் ஆகியன கிடைத்தல்.

3. மேலதிக உற்பத்தியை விற்பனை செய்வதன் மூலம் வீட்டுத் தோட்டத்திலிருந்து பெறமுடியாத உணவுத் தேவைகளை ஈடுசெய்து கொள்ளலாம்.
உ+ம் : சீனி, உப்பு

4. குடும்ப மற்றும் வீட்டுத்தோட்டப் பராமரிப்புக்காக வருமானம் ஈட்டத்தக்க வேறு சிற்றளவிலான முயற்சியாண்மைகளுக்கு உதவுதல்.
உ+ம் : தேனீ வளர்ப்பு, சிற்றளவிலான தைத்த ஆடைக் கைத்தொழில்

5. தரமான (நச்சுப் பொருள்கள் அற்ற) புத்தம்புதிய, சுத்தமான, நம்பகத்தன்மை உறுதிசெய்யப்பட்ட உணவு கிடைத்தல்.

6. சந்தையில் கழிக்கும் நேரத்தையும், அதற்காக ஏற்படும் செலவையும் இயன்றளவுக்குக் குறைத்துக் கொள்ளமுடிதல்

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி






# உலக பெண்களின் வீரத்துக்கு முத்தாய்ப்பு

# முதலாவது தற்கொலை போராளி தளபதி குயிலி

**ப்ரியமதா பயஸ்**

இந்தியாவின் வரலாற்றில் இடம்பிடித்த தமிழ்ப்பெண்களின்வரலாறு, உலகளவில் வாழும்தமிழ்ப்பெண்களுக்கு ஒரு முன்னுதாரணமான வாழ்க்கை வரலாறு – அப்படி அமைந்ததுதான் வேலுநாச்சியார் என்கின்ற பெண்ணின் வீரவரலாறு .இதை தாண்டியும் வேலுநாச்சியார் என்கின்ற பெருந்தலைவியின் வரலாற்றோடு சரிவர வீரம் பொருந்திய இன்னொரு பெண் வாழ்ந்திருக்கிறாள் அவள் எப்படியான வீரம் நிறைந்தவள் என்பதை பார்க்கும் கட்டுரையாக இந்த கட்டுரை அமைகிறது .

கிழக்கிந்தியக் கம்பனி என்பது இந்திய அரசியலில் ஆரம்ப காலங்களில் பெரும் தாக்கத்தை செலுத்தியது பிரித்தானிய ஆளுகை இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் பெரும் தலைவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்த ஒரு காலம்தான் கிழக்கிந்தியாவில் வணிகம் புரிய லண்டன் வர்த்தகர்களின் நிறுவனமும் ஆளுநரும் என்ற நோக்கில் வணிகம் புரிய உலக வணிகத்தில் பாதியளவிற்கு உயர்ந்த குறிப்பாக பருத்தி, பட்டு, தொட்டிச் சாயம், உப்பு, வெடியுப்பு, தேயிலை, அபினி ஆகிய அடிப்படை பொருட்களில் வணிக செயற்பாட்டுக்காக படையெடுத்த இந்தப் படைகள் எத்தகைய ஆட்சி புரிந்தனர் அல்லது ஆளுகை புரிந்தனர் என்பது மிக சவாலான விடயமாக நம் ஆட்சியாளர்களுக்கு இருந்தது .

இந்த பிரித்தானிய ஆளுகை 1600 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி , இந்தியாவில் பிரித்தானியாவுக்கு வணிக முறையிலான முன்னுரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் தொடங்கப்பட்டு, முதலாம் எலிசபெத் மகாராணியால் இதற்கு ஆங்கிலேய அரசப் பட்டயம் வழங்கப்பட்டது. இப் பட்டயம், கிழக்கிந்தியப் பகுதிகளுடனான எல்லாவிதமான வணிகத்திலும் 21 ஆண்டுகாலத் தனியுரிமையை இந்த நிறுவனத்துக்கு வழங்கியது.

> பெண்கள்
> படையில் முதற்
> கட்டச் செயல்பாடாக குயிலி
> என்ற பெண்ணை தற்கொலைப்
> படையாக நியமித்து அனுப்பினார்.
> அதன் பின்னர் தன் உடலில் நெய் பூசி
> வெள்ளையரின் ஆயுதக்கிடங்கில்
> புகுந்து தன்னைத் தானே தீ
> வைத்துக்கொண்டு ஆயுதக்
> கிடங்கை அழித் தார் குயிலி
> என்ற இந்த வீரப்
> பெண் .



ஒரு வணிக முயற்சியாகத் தொடங்கப்பட்ட போதும், இந்தியாவில் பிரித்தானியப் பேரரசு விரிவடைய அடித்தளம் வகுத்தது.

ஆட்சி, மற்றும் இராணுவச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, இந்தியாவையும், இலங்கை முதலிய நாடுகளை ஆளும் நிலைக்கு வந்தது.

இந்த கம்பனி வணிகத்தை கட்டுப்படுத்தியது மட்டுமல்லாமல் அதனை அடிமைப்படுத்தி, காலணித்துவப்படுத்தி ஆட்சிசெய்யும் அமைப்பாக மாறியது.

சிப்பாய்க் கிளர்ச்சிக்குப்பின், 1858 ஆம் ஆண்டில் கிழக்கிந்திய கம்பனி ஆட்சியை ஐக்கிய இராச்சியத்தால் கலைக்கப்பட்டு இதன் கட்டமைப்புக்களை ஐக்கிய இராச்சியம் நேரடியாக நிர்வகிக்கத் தொடங்கியது.

வீரமங்கை ஜான்சிராணிக்கு முன்பே 18 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயோர்களுக்கு எதிராக நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண் வீரமங்கை வேலுநாச்சியார். தமிழகத்தின் கடைக்கோடி மூலை சிவகங்கை சீமையில் இருந்து வெள்ளையர்களை விரட்டியடித்தாள் என்கிற பெருமை வரலாறு வீரமங்கை வேலுநாச்சியருக்கு மட்டுமே உண்டு.

தன் இளமைப் பருவத்திலேயே சிவகங்கையின் மன்னரான முத்துவடுகநாத பெரியஉடையத் தேவரை மணந்து சிவகங்கை சீமைக்கு ராணியானார். இளம் வயதிலேயே திருமணமான வேலுநாச்சியார் கொஞ்ச காலத்திலேயே சோகத்தையும், நாட்டையும் சுமக்க வேண்டிய காலத்திற்கு ஆளானார். ஆற்காடு நவாப்பிற்கு கப்பம் கட்ட மறுத்ததால் ஆங்கிலேயப்படை நவாப் படையும் இணைந்து முத்துவடுகநாதர் மீது படையெடுத்தது. காளையார் கோவில் போரில் முத்துவடுகநாதரும் இவரது இளையராணியான கௌரிநாச்சியாரும் வீரமரணமடைந்தார்கள். இந்த செய்தியை கேட்டதும் வேலுநாச்சியார் இடிந்து போய் இருந்தார். என்னதான் வீரமங்கையாக இருந்தாலும் கணவன் மரணம் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. அரண்மனையில் இருக்கும் தளபதிகளான பிரதானி தாண்டவராயபிள்ளை, மருதுசகோதரர்கள் எல்லாம் முதலில் தங்களை தேற்றிக்கொண்டு பிறகு வேலுநாச்சியாருக்கு நம்பிக்கை, வாக்குறுதிகளை கொடுத்தார்கள். எப்படியாவது இழந்த சிவகங்கை சீமையை மீட்டே தீருவோம் என்பது தான் இவர்களின் ஸ்லோகமாக அப்போது இருந்தது.

இந்த இடத்தில்தான் வேலு நாச்சியாரின் மெய்ப்பாதுகாவலராக இருந்த குயிலி என்கின்ற வீரப்பெண் வெளியாகிறாள் – பதினெட்டாம் நூற்றாண்டில் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய பெண் போராளி தான் இந்த குயிலி. இவர் சிவகங்கை சீமையை சேர்ந்தவர்.சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை ஆங்கிலேய அரசாங்கம் சுட்டுக்கொன்ற பின்னர் 8 ஆண்டுகள் அவர் மனைவி வேலு நாச்சியார் தலைமறைவாக இருந்தார். அப்போது ஆங்கிலேயர்களுக்காக உளவு பார்த்த வெற்றிவேல் என்பவரை குயிலி என்ற பெண் குத்திக் கொன்றார். அதனால் வேலுநாச்சியார் தனது மெய்க் காப்பாளராக குயிலியை நியமித்தார். 1780 இல் வேலு நாச்சியார் மானாமதுரை, திருப்பூர், திருப்புவனம், காளையார் கோவில் போன்ற இடங்களை மீட்டார். மருது பாண்டியர், ஹைதர் அலி ஆகியோரின் உதவியுடன் சிவகங்கையை மீட்க படையெடுத்தார் வேலுநாச்சியார்.

குயிலி என்பவள் வேலுநாச்சியாரின் போர்ப்படையில் பெண்கள் படைக்குத் தலைமையேற்றவர். வேலு நாச்சியாரின்நம்பிக்கைக்குரியபெண்ணாக இருந்தவள். வெள்ளையரை எதிர்த்துப் போரிடும் போது சிவகங்கை அரண்மனையில் வெள்ளையரின் ஆயுதக்கிடங்கு இருந்ததால் அப்பகுதிக்குள் யாரும் செல்ல அனுமதி இல்லை. சிவகங்கை அரண்மனையில் உள்ள ராஜராஜேஸ்வரி அம்மன் கோயிலில் நவராத்திரி விழாவிற்காக விஜயதசமி அன்று கொலு தரிசனத்திற்கு பெண்களுக்கு மட்டுமே அனுமதி இருந்தது. இதைப் பயன்படுத்தி பெண்கள் படையில் முதற்கட்டச் செயல்பாடாக குயிலி என்ற பெண்ணை தற்கொலைப்படையாக நியமித்து அனுப்பினார். அதன் பின்னர் தன் உடலில் நெய் பூசி வெள்ளையரின் ஆயுதக்கிடங்கில் புகுந்து தன்னைத் தானே தீவைத்துக்கொண்டு ஆயுதக்கிடங்கை அழித்தார் குயிலி என்ற இந்த வீரப் பெண் .

1780 ஆம் ஆண்டு தன்னைத்தானே விடுதலைக்காக அழித்தமையால் முதல் தற்கொலைப் போராளி என குயிலி தமிழக வரலாற்றில் வேரூன்றியிருக்கிறார்.

(12 ஆம் பக்கம் பார்க்க...)


காலைக்கதிர் Kalaikkathir

# இராணுவ முகாம்களுக்கு நில ஆக்கிரமிப்பு;

# மக்களின் தாச்சி மறிப்பை முறியடிக்கும் படை உத்தி!

ந.லோகதயாளன்

வடமராட்சி கிழக்கு மண்டலா யில் படையினர் ஆரம்பித் துள்ளஒப்பரேஷன்நிலஅளவை எதுவரை நீளும் என்பது தொடர்பில் படையினரால் ஆக்கிரமிக்கப்படும் நிலங்களின் உரிமையாளர்களிடத்தில் பலத்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.







ஒரு நிலம் அரச பயன்பாட்டிற்காக சுவீகரிப்பதானால் அரசின் முறைப்படி பிரதேச செயலாளர் ஊடாக அது தொடர் பில் நில உரிமையாளருக்கு அறிவிக்க வேண்டும். அல்லது பகிரங்க முன் அறிவித்தல்மூலம்அதைவெளிப்படுத்த வேண்டும். அதன் பின்னர் சுவீகரிக்க திட்டமிடப்பட்ட நிலத்தை அரச நில அள வைத் திணைக்களம் மூலம் அளவீடு செய்து நில உரிமையாளரின் ஒப்புத லுடன் அரச இதழ் ஊடாக சுவீகரிக்கும் அதே நேரம் சந்தை விலைக்கு உரிய-வருக்கு இழப்பீட்டை வழங்க வேண்டும். ஒப்புதல் இன்றி பெற விசேட ஏற்பாடுகள் இருப்பினும், நிச்சயமாக பகிரங்க அறிவித்தல் மற்றும் அரச திணைக்கள அளவையாளர்கள் மூலம் அளவீட்டுப் பணியை மேற் கொள்ளல் ஆகியவை கட்டாயம்.

இந்த நிலைமையில், வடக்கு, கிழக்கில் போரின் காரணமாக மக்கள் விட்டு வெளியேறிய அவர்களின் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்த படையினர் தமது தொடர் இருப்பிற்காக மக்களின் அந்த இடங்களை அடாத்தாக பிடித்து குந்தியிருந்து கொண்டு, அந்த வளமான பகுதிகளை தமக்கே நிரந்தரமாகதரவேண்டும்எனவும்அடம்பிடிக்கின்றனர்.

இதனால் வடக்கு, கிழக்கில் ஆங்காங்கே படை யினருக்காக நிலத்தை அளவீடு செய்யும் அறிவித்தல் விடுக்கப்படுவதும், அதற்காக அளவீட்டுத் திணைக் களம் அந்தக் காணிகளுக்கு குறித்த தினத்தில் வருவதும் உரிமையாளர்களும் அரசியல்வாதிகளும் அச்சமயத்தில் அங்கு கூடி நில அளவையாளர்களை நிலத்தை அளக்க விடாது தாச்சி மறிப்பதும் ஓர் நித் திய கபடி விளையாட்டு ஆகிவிட்டது.

இதன் காரணமாகவோ என்னவோ இராணுவத்தி னர் இப்போது புதிய உத்தியை கையாள முற்படுகின் றனர். அதாவது தமது பொறியியல் பிரிவின் கீழ் உள்ள அளவீட்டு பிரிவினர் மூலம் வடமராட்சி கிழக்கில் அளவீட்டுப் பணியை கடந்த 14ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு அளவீடு செய்யப்படும் பிரதேசம் 2008 ஆம் ஆண்டு படையினரின் முழுமையான கட்டுப் பாட்டிற்குள் சென்றபோதும், 2011ஆம் ஆண்டு முதல்



My No: VA/EA/LB/??/VI
Asst.Govt.Agent's Office,
Vadamaradchy East,
Kudathanai
17.04.2012

Land Commissioner General,
Land Commissioner General's office,
"Mihikatha Medura" Land Secretariat,
1200/6, Rajamalwatta Road,
Battaramulla.

Through:
Provincial Land Commissioner,
Northern Province.

**Handing over of the requested land for the construction of Sri Lankan Army Head-Quarters to 551 Brigade at Vadamaradchy-East, Jaffna (30 Acres)**

**Handing over of the requested land for the construction of training base to 551st Brigade and 55 Division at Vadamaradchy-East, Jaffna**

Reference to the letter No: 4/1/ ... dated on 06th of February 2012 regarding the above subject.

It is kindly informed that as an Assistant Government Agent / Divisional Secretary, I ... not have the authority to take any actions against to the requested lands in the letter until the issuance of order from Ministry of Land and Land Development to acquire the lands which are the private lands under sub section (1) of section 2 of the land acquisition Act as amended by the Land Acquisition (Amendment) Act, No 28 of 1964.

Further, I wish to put forward the following matters into your account regarding the acquisition of the above indicated lands.

1. The 700 acre land proposed to be acquired to construct a training base by 553rd Brigade and 55 Division has an Ancient Hindu Temple (Mandala) Pillaiyar Temple which had been worshipped by area people for long time. During the acquisition, the worship will be badly affected. It will create some unwanted psychological phenomena and affect the building up relationship with the people after the severe conflict.

2. There are very limited paths to access to the other parts of the country because of its geographical structure as a narrow stripe surrounded by lagoon and sea. When the above lands will be used to construct the training base, the two roads cannot be used by the people. (the roads are indicated in the annexed figure)

The transport of people who affected severely by Tsunami earlier and the Tsunami alert like today (8.9 Rix at Ache Province, Indonesia, 11th April, 2012) will be affected high number of losses of lives because of the non use of the closed roads. (The two roads are only the exit ways during emergency situations)

3. At Vadamaradchy East, most of the land has soil area like coastal zone and a small part has fertile soil for agriculture. The proposed 700 acre land was the estate where coconut, Palmyrah and mango tree cultivated. And also there is 128 acre extent of paddy lands in a surprising manner. Therefore, the people who cannot see the greenish environment ... outside treat the area as like beautiful heart of them. When the lands will acquire, the economic value will also be affected. While the owners of the one part of land submitted the request to the Army Commander, Jaffna to handover the lands to them, the letter is annexed herewith.

Due to the above reasons, it is better to review to this request by indicating other alternative lands within the division or other possible ways to build up efficient and effective governance a people socio-friendly manner and avoid the losses of lives in disaster times like Tsunami.

Asst.Govt.Agent
Vadamaradchy East.

N. Thirulinganathan
Assistant Government Agent
Vadamaradchi East
Maruthankerny

> படையினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட ஐந்நூறு ஏக்கர் நிலத்தை மீண்டும் அபகரிக்கும் முயற்சியாக நில அளவைத் திணைக்களத்திற்குப் பதிலாக இராணுவம் மூலம் அளக்க முயற்சி – மக்கள்.
> நில அளவைத் திணைக்களம் இன்றி ஏனையோரின் அளவீடு சட்டபூர்வமாகாது – அதிகாரிகள்.
> தற்போது முகாம் உள்ள 200 ஏக்கர் மட்டுமே எடுக்கப்படும் – இராணுவம்.

இப்பகுதியில் மக்கள் குடியமர அனுமதிக்கப்பட்டனர். இக்காலத்தில் இந்த நிலங்கள் படையினரின் பிடியில் இருந்தன. இவ்வாறு படையினரிடம் இருந்த நிலத்தில் 2017ஆம் ஆண்டு அப்போதைய அரசினால் 500 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டது. இருப்பினும் தற்போது சுவீகரிப்பது 700 ஏக்கர் என்னும் பெயரில் இரு கிரா மங்கள் பகுதியளவில் இந்த 700 ஏக்கரிற்குள் அடங்குகின்றவா என்ற அச்சம் எழுப்பப்படுகின்றது.

### இனத்தின் அடையாளங்களும் பொது இடங்களும் ஆக்கிரமிப்பு

**மருதங்கேணி**


மண்டலாய், கோயில்வயலின் ஒரு பகுதி, புல்லா வெளிஒருபகுதி,உணவத்தை,வெற்றிலைக்கேணியில் ஒருபகுதி ஆகிய கிராமங்கள் பறிபோகும் வலயமாக இருக்கலாம் எனக் கருதும் நிலையில், ஆயிரம் ஏக்க ரைத் தாண்டுவதாகவே இந்த எல்லைகள் உள்ளன. ஏனெனில் இதற்கு எல்லைகளாக வடக்கே கடல்நீர் ஏரி , கிழக்கு புல்லாவெளி – முள்ளியான் வீதி, தெற்கு இயக்கச்சி – கட்டைக்காடு வீதி, மேற்குத் திசையில் ராணிக்கோட்டை – வெற்றிக்லைக்கேணி வீதியெனவும் காணி சுவீகரிப்பு அதிகாரியின் ஒரு வெளிப்படுத்தல் தெரிவிக்கின்றது.

இவ்வாறு சுவீகரிக்க முனையும் பிரதேசத்திற்குள் இருக்கும் உணவத்தை கண்ணகி அம்மன், மண் டலாய் பிள்ளையார் கோவில் ஆகியன 100 வருடங் களிற்கும் மேல் தொன்மையானவை. இதனைத் தவிர 7 சிறு இந்து ஆலயங்களும், ஒரு கத்தோலிக்க ஆலயமும் உள்ளமையோடு 9 குளங்களும் உள்ளன.

இப்பிரதேசத்திற்குள் தற்போதைய படை முகாம் உள்ள 200 ஏக்கர் பரப்பளவிற்குள் 39 பேருக்குச் சொந் தமான நிலங்கள் உள்ளன. இந்த நிலத்தில் 1990இற்கு முன்னர் முந்திரிகை, கொடித் தேசி, தென்னை ஆகி யவற்றுடன் யாழ்ப்பாணத்திலேயே முதன் முதலாக பரீட்சார்த்தமாக அப்பிள் தோட்டச் செய்கை பரீட்சிக்கப் பட்ட பகுதிகள் காணப்படுகின்றன. இப்பகுதியில் 1980 ஆம் ஆண்டில் அறுபதுக்கும் மேற்பட்டோர் நேரடியாக வேலை புரிந்துள்ளனர்.

### பிரதேச செயலாளர்களின் மாறுபட்ட கடிதம்

இக் காணிகள் அரச நிலம் அல்ல, உறுதிக் காணி கள் எனவும் இவற்றை சுவீகரிக்க முடியாது எனவும் 2012 ஆம் மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் பணி யில் இருந்த மருதங்கேணி பிரதேச செயலாளர்கள் எழுத்தில் வழங்கியபோதும் 2019 ஆம் ஆண்டு பதவி



பிரதேச செயலகம், வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி.
Divisional Secretariat, Vadamarachy East, Maruthankerny.

The details of the owners of 200 Acres occupied by 553 Brigade Army Camp

யில் இருந்த பிரதேச செயலாளர் 7 உரிமையாளர் களது பெயர் விவரத்தை மட்டும் வழங்கியுள்ளார்.

இதேநேரம் இப் பகுதி நிலத்தின் 4 உரிமை யாளர்கள் சார்பில் இலங்கையின் மேன் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

### பலாலி முகாமின் ஒரு பகுதி இங்கே நகர்த்தப்படுகின்றதா?

வலி. வடக்கின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டு மேலும் 3 ஆயிரம் ஏக்கர் படையினர் வசம் உள்ளபோதும் வலி.வடக்கில் படையினரிடம் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்த படை நிலைகள் வடமராட்சி கிழக்கிற்கு நகர்த்தப்படுகின்றனவா என்ற ஐயமும் இப் பகுதி நில உரிமையாளர்களிற்கு உள்ளது. இதற்கு வலுச் சேர்ப்பது போன்று கடந்த 11ஆம் திகதி பலா லியில் இருந்து வாகனத் தொடரணியில் ஒளிச் சமிக் கைகளுடன் எறிகணை பெட்டிகளை ஏற்றிய வாகனத் தொடரணி சென்றமை இச் சந்தேகத்தை வலுவடையச் செய்கின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க...)


# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 8 | சமச்சீர் | கணிதம் அலகு 11


**இருபுடைச்சமச்சீர்**

தளவுரு ஒன்றை நேர்கோடொன்றின் வழியே மடிக்கும்போது பெறப்படும் இரு பகுதிகளும் ஒன்றுடனொன்று சரியாகப் பொருந்துமெனில் அது இருபுடைச்சமச்சீருடைய தளவுரு ஆகும்.
அம் மடிப்புக்கோடு அத்தளவுருவின் சமச்சீர் அச்சு எனப்படும்.

உதாரணம்



பின்வரும் உருக்களின் சமச்சீர் அச்சுக்களை வரைக.













**சுழற்சிச் சமச்சீர்**

* தளவுரு ஒன்றை அதன் மையப் புள்ளி பற்றி ஒரு முழுச்சுழற்சிக்கு (360) உட்படுத்தும் போது தன் ஆரம்ப நிலையுடன் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தடவைகள் பொருந்துமெனில் அது **சுழற்சிச் சமச்சீருடைய தளவுரு** ஆகும்.
* அவ்வாறு பொருந்தும் தடவைகளின் எண்ணிக்கையானது **சுழற்சிச்சமச்சீர் வரிசை** எனப்படும்.
* மையப்புள்ளியானது அதன் சுழற்சிமையம் ஆகும்.

உதாரணம் செவ்வகத்தின் **சழற்றிச்சமச்சீர்** வரிசை 2 ஆகும்.

பின்வரும் உருக்களின் சழற்றிச்சமச்சீர் வரிசைகளின் எண்ணிக்கைகளை எழுதுக.

| **தளவுருவின் பெயர்** | **சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை** | **சுழற்சிச்சமச்சீர் வரிசை** |
|---|---|---|
| 1.சமபக்க முக்கோணி  | | |
| 2.இருசமபக்க முக்கோணி  | | |
| 3.செவ்வகம்  | | |
| 4.சதுரம்  | | |
| 5.சாய்சதுரம்  | | |
| 6.இணைகரம்  | | |
| 7.ஒழுங்கான ஐங்கோணி  | | |
| 8.ஒழுங்கான அறுகோணி  | | |
| 9.ஒழுங்கான எண்கோணி  | | |
| 10.வட்டம்  | | |

# நேற்றைய வினாக்களுக்கான விடைகள்

தரம் - 8 | சுட்டிகள் | அலகு 10

1.

| எண் | சுட்டி வடிவம் | அடி | சுட்டி |
|---|---|---|---|
| உதாரணம் 8 | $2x2x2=2^3$ | 2 | 3 |
| 9 | $3x3 = 3^2$ | 3 | 2 |
| 16 | $2x2x2x2=2^4$ | 2 | 4 |
| 125 | $5x5x5 =5^3$ | 5 | 3 |
| 625 | $5x5x5x5=5^4$ | 5 | 4 |
| 1024 | $2^{10}$ | 2 | 10 |
| 1000 | $10^3$ | 10 | 3 |
| 144 | $12^2$ | 12 | 2 |
| 1024 | $4^5$ | 4 | 5 |
| 729 | $3^6$ | 3 | 6 |

2.
1.3xaxb
2.5xpxqxr
3.7xaxbxb
4.axbxc
5.2xpxp
6.3xxxx
7.2xpxpxpxqxq
8.4x4xxxxxx
9.5x5xxxxxyxy
10.3x3xaxaxaxbxbxcxcxc

3.
11.2x2x2
12.2x2x3
13.2x2x5
14.3x3x3
15.2x2x2x2x3
16.2x2x5x5
17.2x2x2x2x3x3
18.3x3x5x5
19.7x7x7
20.3x3x3x3x3x3

**வலுவின் வலு**

1.
1.$27x^3$
2.$27a^3b^3$
3.$25a^2$
4.$64p^2$
5.$64y^3$
6.$16k^4$
7.$243x^5$
8.$x^5y^5$
9.$2401p^4$
10.$100m^2$
11.$64 x^3y^3$
12.$p^5q^5r^5$
13.$256a^8b^8c^8$
14.$a^5b^5x^5$
15.$1000000t^6$
16.$14^2 = 196$
17.$66^3 = 287476$
18.$4096x^4$
19. $16384p^7q^7$
20.$64a^2b^2$

5.
1.$(5x2)^3$ — 1.100
2.$(5x10)^2$ — 2.7776
3.$(xxy)^2$ — 3.10648
4.$(10m)^2$ — 4.42875
5.$(5a)^2$ — 5.3600
6.$(6b)^2$ — 6.27000
7.$(7ab)^2$ — 7.288
8.$(2y)^3$ — 8.370440
9.$(15t)^2$ — 9.864
10.$(10p)^3$ — 10.144

**பயிற்சி**

1.
1.1
2.-1
3.-1
4.1
5.16
6.- 125
7.10000
8.-6
9.- 128
10.- 243

1.1
2.- 64
3.16
4. - 125
5.-64
6.25
7.4
8.1
9.1
10.1

02.
1.$2^5$
2. $3^4$
3.$a^6$
4.$2^3x y^2$
5.$5^3x m^2x a^2$
6.$2^6x p^2$

03.
1. $2^4x3^4 x 5^4$
2. $3^{10}xX^{10}xy^{10}$
3.$2^{12}xa^{12}xb^{12}$
4.$5^6x2^6x x^6$
5.$m^5x a^5x b^5$
6.$a^5x b^5$

04.
1. $(my)^8$
2. $(mn)^8$
3.$(5ym)^6$
4.$(2ya)^{10}$
5.$(5pq)^6$
6.$(2ab)^4$

05.
1.$(-10)^1, (-1)^{10},2^3,3^2$
2.$(-2)^5, (-1)^5, (-1)^4, (-2)^4$

**ஆக்கம் : தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை)
யா/செங்குந்த இந்துக் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திரு ஞானமணி இரத்தினசிங்கம்
(ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.

காலைக்கதிர் Kalaikkathir

வடமாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள முல்லைத்தீவு பிராந்தியத்திற்கான பிரதி நீர்ப்பாசன பணிப்பாளராக கடமையாற்றி நான், கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக உலகளாவிய ரீதியாக அச்சுறுத்தலுக்குள்ளாக்கிவரும் கொவிட்- 19 என்கின்ற கொரோனா பரவலின் தாக்கத்தினால் பல அனுபவங்களினை எமது அன்றாட வாழ்க்கையில் பெற்று வருகின்றோம். புதிய புதிய எதிர்பாராத விடயங்கள், மனித குலத்தை அச்சுறுத்தும் நடவடிக்கைகள் மற்றும் எமக்கான படிப்பினைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ தந்துகொண்டே இருக்கிறது.

அந்தவகையில் நான் எனது அன்றாட வாழ்வில் உங்களைப் போலவே பல அனுபவங்களைப் பெற்று வந்திருக்கின்றேன் என்பதுடன் அதன் உச்ச நிலையாக இத்தொற்றினால் பாதிக்கப்பட்டு அதனை சுகாதாரத்துறையினரது வழிகாட்டல்கள் எனது உளமார்ந்த ஈடுபாடு காரணமாக வெற்றிகரமாக கையாண்டிருக்கிறேன். பிரச்சினை ஒன்று உருவாகும் போது அதற்கான தீர்வுகளை அடைவதற்கான வாய்ப்புக்களையும் இயற்கை எமக்கு தந்திருக்கிறது என்பதை மனதில் நிறுத்தி இக்கொடிய நோயுடன் போராடியிருக்கிறேன். இந்த அனுபவத்தினை இனியும் குறித்த நோய்த்தாக்கத்தினை அல்லது இதுபோன்ற வேறு நோய்த்தாக்கங்களை எதிர்கொள்ள இருக்கின்ற எமது சமூகத்திற்கு இக்கட்டுரையினூடாக அனுபவ பகிர்வாக கூற விழைகின்றேன்.

எனது அனுபவ பகிர்வுகளினை அறியும் போது கொவிட் -19 தொடர்பாக நான் அறிந்த விஞ்ஞான ரீதியான தகவல்களை தேடல்களின் மூலம் பெற்று மேலதிக தகவலுக்காகவும் வரலாற்று பதிவிற்காகவும் தொகுத்தளித்துள்ளேன்.

எனது இந்த அனுபவ பகிர்வில், ஏதாவது தவறுகள் இருப்பின் தயவுடன் மன்னித்து இதில் உள்ள முக்கிய விடயங்களினை உள்வாங்கி இக் கொடிய நோய்க்கு எதிராகவும் இனிவரும் காலங்களில் நாம் எதிர்கொள்ளவுள்ள சுகாதார பிரச்சினைகளின் போதும் அதனை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் சமூகமாக ஒன்றிணைந்தது பயணிக்க இது ஒரு புள்ளியாக அமையும் என நம்புகின்றேன்.

எந்திரி. நவரட்னம் சுதாகரன்
பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்,
முல்லைத்தீவு பிராந்தியம்



# கொரோனாவுக்கு எதிரான போராட்டம்

## ஓர் அனுபவத் தொடர்

அங்கம் 1

### கொரோனா வைரஸ் /கொவிட் 19

அறிமுகம்– நோய்களின் சர்வதேச பரவல் (pan emic) என்பது உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் ஒரே நேரத்தில் மக்களிடையே பரவும் தொற்றாகும். ஒரு வைரஸ், மக்களிடமிருந்து மக்களுக்கு எளிதாக பரவினால் அது தொற்று என்கிறார்கள். 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தோன்றிய பன்றிக் காய்ச்சல் உலகளவில் பரவும் தொற்றாக உலக சுகாதார ஸ்தாப னத்தினால் அறிவிக்கப்பட்டது. இதில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்தனர். எனவே இவ்வாறு, ஒரு நோயை தொற்று என அறிவிப்பது எமக்கு புதிது கிடையாது.

தற்போது உலகளவில் பெரும் அச்சுறுத்தலாக வியாபித்துக்கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் என்பது பெருந்தொற்று நோய் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றார்கள். 2019 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் சமூகவலைத்தளங்கள் மற்றும் செய்திகள் மூலமாக இந்நோய்த்தாக்கம் குறித்து உங்களைப் போலவே நான் அறிந்துகொண்டேன். அச்சந்தர்ப்பத்தில் இந்நோய்த்தாக்கத்தினை செய்தியாகவே பார்க்க முடிந்தது. அதன் தாக்கத்தினை வீரியத்தினை முழுமையாக உணர முடிந்திருக்கவில்லை. இதன் தாக்கம் இலங்கைக்கு பரவாது என்றே நம்மில் பலரும் நினைத்தோம்.

ஆரம்பத்தில் இந்நோய்த்தாக்கம் குறித்து அறியப் பெற்றிருக்கையில், சீனாவின் ஹீபே மாகாணத்தின் தலைநகர் வூகானில் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் முதன் முதலில் கண்டறியப்பட்டதாக அறிந்து கொண்டேன். அங்கு வசிக்கும் சிலருக்கு காரணம் தெரியாத நுரையீரல் அழற்சி ஏற்பட்டதாகவும் தற்போது பயன்பாட்டில் உள்ள தடுப்பு மருந்துகள், சிகிச்சைகள் யாவும் பயனளிக்கவில்லை எனவும் செய்திகள் மூலமாக அறிய முடிந்தது. வௌவால்கள் மூலம் மனிதர்களுக்கு பரவியதாக முதல்கட்ட ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது. 2020 ஜனவரி 07 ஆம் திகதி இந்நோய்க்கான காரணம் கொரோனா வைரஸ் என உறுதிப்படுத்தப்பட்டதை அறிந்துகொண்டேன்.

கொரோனா வைரஸ் ஆனது ஒரு நுண் உயிரி, உயிர்கொல்லி நோயை ஏற்படுத்தும் தன்மை கொண்டதாகவும் கொரோனா வைரஸ் பாதித்தால் சாதாரண சளி முதல் சார்ஸ், மெர்ஸ், நிமோனியா போன்ற தீவிர நோய்கள் ஏற்படும் எனவும், இதன் தாக்கத்தின் வீரியத்தினால் இறுதியில் உயிரிழப்பு ஏற்படும் எனவும் வைத்திய நிபுணர்கள் தெரிவித்திருந்தனர்.

இவ்வகை தீநுண்மி சீன மக்களிடையே மிகவேகமாக பரவியதுடன் அதன் பரவுதல் வீதம் (நோய்த் தொற்றின் வீதம்) 2020 ஜனவரி நடுப்பகுதியில் அதிகரிப்பதாக தோன்றியது. ஐரோப்பா, வடஅமெரிக்கா மற்றும் ஆசிய–பசுபிக் பகுதிகளில் பல நாடுகள் இத்தொற்றுகளைப் பதிவு செய்தன. இத்தொற்றின் அறிகுறிகள் தோன்றுவதற்கு 2 முதல் 14 நாள்கள் வரை ஆகலாம் எனவும் மேலும் இந்த நோயின் அறிகுறியில்லாதவர்களும் நோய்ப்பரவலுக்கு காரணமாக இருக்கலாம் என்பதற்கான தற்காலிகச் சான்றுகளும் அறிவிக்கப்பட்டன. இதனால் அனைத்து நாடுகளுமே பதற்ற நிலையினை எதிர்கொண்டு வைரஸ் தாக்கத்திலிருந்து பாதுகாப்பினை உறுதிப்படுத்த நாட்டுமக்களுக்கு உரிய விழிப்புணர்வு நடவடிக்கைகளினை வழங்கிக்கொண்டிருந்தன.

சுவாச கிருமித்தாக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு தேவையான அனைத்து பொருத்தமான சுகாதார செயற்பாடுகளினையும் முன்னெடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

01. முகக்கவசம் கட்டாயமாக அணிதல்.

02. அதிக சனநடமாட்டமுள்ள இடங்களை தவிர்த்தல். நபர்களுக்கிடையிலான இடைவெளிகளினை பேணல்.

3. சவர்க்காரம் மற்றும் நீரினால் அல்லது அல்கஹோல் கொண்ட கைகழுவிகளினால் அடிக்கடி கைகளினை கழுவுதல்.

4. இருமும் போதும், தும்மும் போதும் திசு போன்றவற்றால் வாயையும் மூக்கையும் மறைத்துக்கொள்ளல், பயன்படுத்திய திசுக்களை உரிய முறையில் அகற்றுதல், மற்றும் கைகளை உடனடியாக கழுவுதல்.

5.காய்ச்சல் மற்றும் இருமல் இருப்பவருடன் நெருக்கமான தொடர்பைத் தவிர்த்தல்.

6. ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்களை கொண்டிருத்தல்.

7. வைத்திய ஆலோசகர்களினால் அறிவுறுத்தப்படும் விடயங்களினை முறையாக கடைப்பிடித்தல்.




8. கொரோனா வைரஸ் தாக்கத்திற்குள்ளான ஒரு இடத்தில் இருந்து பயணித்த பின்னர் காய்ச்சல் மற்றும் இருமல் இருந்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனையினை பெறுவதுடன் பயணம் தொடர்பில் மருத்துவ சேவை வழங்குனருக்கு தெரியப்படுத்தல் என் பனவற்றை முறையாக கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

### உலக சுகாதார அமைப்பின் அறிவுறுத்தல்கள்

உலக சுகாதார அமைப்பு கடந்த 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கொவிட் 19 பெருந்தொற்று நோயாக அறிவித்தது. தொடர்ந்து 2020 மார்ச் 12 அன்று




கொவிட் 19 உலகளாவிய நோய்த்தொற்று என பிரகடனப்படுத்தியது. இந்த கொரோனா வைரஸுக்கு எதிராக அவசர மற்றும் தீவிர நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து நாடுகளுக்கும் உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தியவண்ணம் இருந்தது. அதே வேளை நாங்களும் நமது சுயகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினோம்.

மேலும் உலக சுகாதார அமைப்பு (WHO), அமைப்பின் கருத்துப்படி “கொரோனா வைரஸ் நோய் எதிர்வரும் இருபது ஆண்டுகளிற்கு பொதுச் சுகாதாரத்திற்கு ஒரு தீவிரமான பிரச்சினை எனவும், அதிவேகமாக உலக அளவில் பரவியுள்ளது” எனவும் குறிப்பிட்டுள்ளது. இவ்வைரஸினை ஆரம்பத்தில் புதிய வைரஸ் 2019 - nCoV என குறிப்பிட்டனர். பின்னர் வைரஸ்கள் வகை பிரித்தல் தொடர்பான சர்வதேச குழுவின் (ஐ.சி.டி.வி) நிபுணர்கள் இது SARS-Cov - 2 வகையான வைரஸ் என்று கூறினார்கள்.

### கொவிட் 19 இன் பிரதானமான அறிகுறிகள்

இந்நோயின் தாக்கம் குறித்து நான் அறிந்து கொண்டவகையில் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு முதலில் காய்ச்சலாகவும் பின்னர் வறட்டு இருமலாக மாறும் எனவும், 5 முதல் 7 நாள்களுக்குப் பின் பலவீனமான நுரையீரல் செயல்பாடு கொண்ட முதியோருக்கு மூச்சுத்திணறல் ஏற்படும் எனவும், அதே சமயம் இளைஞர்களுக்கு அடிப்படை சுவாசக் கோளாறுகளுக்கு அழற்சி தூண்டப்பட்ட நுரையீரல் காயத்தை ஏற்படுத்துகிறது. இது நோயின் முக்கியமான கட்டம். இதிலிருந்து சுவாச செயல்பாடுகளில் பாதிப்பு இருக்கலாம் என்பதால் செயற்கை சுவாசம் 12 வாரங்களுக்கு பரிந்துரைக்கப்படுவதான சுகாதாரத் துறையினர் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

### கொவிட் 19 தொற்று தொடர்பாக மிக அவதானமாக இருக்க வேண்டியவர்கள்

ஏற்கனவே தொற்றா நோய்களான நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோய் போன்றவற்றுக்கு உட்பட்டு இருப்பவர்கள் கொரோனா வைரஸால் அதிக ஆபத்தை சந்திப்பார்கள் எனவும் முதியோர்களுக்கு இந்த நோய்த்தொற்று வந்தால் ஒட்டுமொத்த இறப்பு விகிதம் 4 முதல் 11% வரை இருக்கும் எனவும் தெரிவித்திருந்தனர்.

தொடரும்.

காலைக்கதிர் Kalaikkathir

# இராணுவ முகாம்....

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு மக்களிற்குச் சொந்தமான பெருந்தொகை நிலங்களை படையினர் கோர, அதற்கான சுவீகரிப்பு அறிவித்தல் வந்தபோதும், அதனை தடுப்பதனால், ஏதோ ஒருகாலத்தில் அது தம் வசம் கிடைக்கும் என உறுதிகளை வைத்துக்கொண்டு காத்திருக்கும் மக்களின் நம்பிக்கையின் தலையில் இடி விழுவது போன்ற செய்தியாக படையினரின் மூலம் அளவீடு செய்யும் பணி அமைந்துள்ளது. இப் பிரதேசத்தில் தற்போது நிலத்தின் விலை ஏக்கர் ஒன்று 10 லட்சம் ரூபாவைத் தாண்டி விட்டதாக நில உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### அரச அதிகாரிகளின் கருத்து

படை முகாம் உள்ள 200 ஏக்கரை சுவீகரிப்பதற்காக அரசினால் 5 கோடி ரூபா அனுமதிக்கப்பட்டிருப்பதன் அடிப்படையில் பணி முன்னெடுக்கப்படக் கூடும். இருப்பினும் அந்த நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு உள ளிட்ட சட்ட விடயங்களுக்கு சட்டத்தின் பிரகாரம் நில அளவைத் திணைக்களத்தின் வரைபடம் மட்டுமே அதற்கு செல்லுபடியானது என்கின்கின்றனர்.

இவை தொடர்பில் படைத்தரப்பின் பக்க தரப்பின் தகவலை அறிய முற்பட்டபோது, இப் பகுதியில் தற்போதுள்ள படை முகாம் பகுதி சுமார் 200 ஏக்கர் பரப்பு கொண்டதாக இருக்கின்றது. அதனை சரியான 200 ஏக்கராக உறுதி செய்து அந்தப் பகுதி மட்டுமே சட்ட ரீதியாக சுவீகரிக்கப்படவுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இதன் பிரகாரம் இராணுவ முகாம் தற்போது உள்ள 200 ஏக்கர் இடம் மட்டுமே சுவீகரிக் கப்படும், அன்றி மேலதிக நிலம் சுவீகரிக்கப்பட மாட் டாது என்கின்றனர்.

இந்த முறையிலான அளவீடு ஏற்கனவே இயக் கச்சி படை முகாமின் 24.6 ஏக்கரும் இராணுவ பொறி யியல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு விட்ட தாகவும் ஒரு தகவல். சத்தம் சந்தடியின்றி மேற்கொள் ளப்படும் இது போன்ற அளவீட்டு நடவடிக்கை ஏனைய இடங்களுக்கும் பரவக்கூடும் என்றே கரு தப்படுகின்றது.

சில இராணுவ முகாம் விஸ்தரிப்பு பணிக்கு சீன அரசு உதவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் மண்டளாய் இராணுவ முகாம், வட்டுவாகல் கோட்டாபய கடற்படை தளம் உட்பட 6 தளங்களை புனரமைக்க சீன அரசு நிதி உதவி செய்வதனால், அதற்குப் பிரதியுபகாரமாக புனர மைப்பின் பின்னர் ஒருபகுதி சீனாவிற்கு வழங்கப்படுமா என்ற சந்தேகம் எமக்கு உள்ளது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவிக்கின்றார்.

# வீதி குன்றும் குழியுமாக உள்ளதால் அவதியுறும் சம்பூர் பிரதேச மக்கள்



திருகோணமலை – மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட சம்பூர் கிராமத்திலுள்ள கமநலச் சேவை நிலைய வீதி (ஏ.பி.சி.வீதி) கடந்த பல வருடங்களாக குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இந்த வீதியால் பிரயாணம் செய்வது மிகக் கடினமாக உள்ளது என்றும் இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு கோரி அப்பிரதேச மக் களும், விவசாயிகளும், வாகன சாரதிகளும், பாட சாலை மாணவர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை யும், உள்ளூர் அரசியல்வாதிகளையும் கேட்டுக்கொள் கின்றனர்.

பயங்கரவாத யுத்த காலங்களில் இடம்பெயர்ந்த மக்கள் கடந்த 2015 ஆண்டு மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவ்வாறு கூடைக்குடா, கூனித்தீவு, நவரத்தனபுரம் போன்ற கிராமங்களில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்கள் தங்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டுமானால் இந்த வீதியால்தான் பயணிக்கவேண் டும் என்றும் வேறு மாற்று வீதிகள் இல்லை எனவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதி சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை குன்றும் குழியுமாக காணப்படுவதால் குறித்த கிராமங் களில் வசிக்கின்ற மக்கள் வைத்தியசாலைக்குச் செல் வதாக இருந்தால் பல சிரமங்களை எதிர்கொண்டு செல்லவேண்டியுள்ளது. குறிப்பாக அவசர சிகிச்சையை பெற்றுக்கொள்ள செல்கின்றவர்களும், கர்ப்பிணித் தாய்மார்களும் பாரிய சிரமங்களை எதிர்நோக்கிச் செல்லவேண்டியுள்ளது என்றும் மழை காலங்களில் இந்த வீதியால் முற்று முழுதாக பிரயாணம் செய்ய முடியாதுள்ளது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக உள்ளூர் அரசியல்வாதிகளிடமும், அதிகாரிகளிடமும் பல தடவைகள் முறையிட்டும் எவ் வித நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொள்ள வில்லை என்றும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மூதூர் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டத்தில் குறித்த வீதியை உள் வாங்கி புனரமைத்துத் தருமாறு கோரிய கடிதத்தையும் பிரதேச செயலாளரிடம் வழங்கியிருந்தோம். அதற்கு பிரதேச செயலாளரும் செய்து தருகிறேன் என வாக்கு றுதியளித்திருந்தார். பின்னர் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டத்தில் குறித்த வீதி புறக்கணிக்கப்பட்டு மக்கள் பயன்படுத் தாத சம்பூர் குறுக்கு வீதியை 20 லட்சம் ரூபா நிதியில் அமைத்துள்ளனர் என்றும் அந்தக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, பயங்கரவாத காலத்திலும், பயங்கரவாதம் அற்ற இந்தக் காலத்திலும் பல துன்பங்களையும், கஷ் டங்களையும் அம்மக்கள் தொடராக எதிர்நோக்கிக் கொண்டு வருகின்றமையை எம் நாட்டு அரசாங்கமும், இது தொடர்பான உயர் அதிகாரிகளும், உள்ளூர் அரசி யல்வாதிகளும் கவனத்திற் கொண்டு அந்தக் கிராம மக் களின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

# யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்தினால் தொழில் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

**கலையமுதன்**

யாழ்ப்பாணம்,ஜூன் 18

யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தால் பிரயாணத்தடை யால் பாதிக்கப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட வறுமையான குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள் கையளிக்கும் நிகழ்வு யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

இதன்படி ஒரு பிரதேச செயலக பிரிவிற்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான 50 பொதிகள் வீதம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலக பிரிவுகளுக்கு மாக மொத்தம் 750 பொதிகள் யாழ் மாவட்ட அரச அதி பரிடம் யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தினரால் கைய ளிக்கப்பட்டது.

அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட பொதிகள் 15 பிர தேச செயலகர்களிடம் உடனடியாக கையளிக்கப்பட்ட மையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதி பர் க.மகேசன், யாழ்ப்பாண வர்த்தக சங்க தலைவர் ஜெயசேகரம், வர்த்தகர்கள், பிரதேச செயலர்களும் கலந்துகொண்டனர்.

# உலக பெண்களின்....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாள்வீச்சு, அம்பு விடுதல், ஈட்டி எறிதல், குதிரை யேற்றம், யானையேற்றம் என்று எல்லா போர்க் கலை களையும் குயிலி கற்றார். இவர் இந்திய சமூகத்தில் தாழ்த்தப்பட்ட( சாதி ) தலித் என்று சொல்லப்படுகின்ற சமூகத்தைச் சேர்ந்தவர் என்றே இன்றும் அவர்பற்றிய வரலாற்றை வரையறுப்பதுதான் மிக துயரமான இந் தியஅரசியல்சமூகபின்நிலையென்றுகருததோன்றுகின்றது. வீர விளையாட்டுகள் மட்டுமன்றி பாடங்களிலும் குயிலி சிறந்து விளங்கினார், வேலுநாச்சியாரின் மெய்க்காப் பாளர் குயிலி. தாழ்த்தப்பட்ட அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்தவர். மெய்க்காப்பாளராக விளங்கிய குயிலி பெண்கள் படைக்கு தளபதியாக்கப்பட்டார். என்னதான் வீரம் நிறைந்தவர்கள் படையில் இடம்பெற்றிருந்தா லும் ஆங்கிலேயரின் நவீன ஆயுதங்கள் மிகப்பெரிய சவாலாக இருந்தன.

அதில் குயிலி உடல் முழுவதும் எண்ணெயை ஊற் றிக்கொண்டு, கோயிலில் இருந்த எரியும் பந்தத்தோடு அரண்மனையின் உப்பரிகையை அடைந்ததும் தீப்பந்தத்தால் தனது உடலில் தனக்குத்தானே தீ வைத்துக்கொண்டு, அந்த ஆயுதக் குவியலில் குதித்து விட, ஆயுதங்கள் தீப்பிடித்து எரிந்தன. வெள்ளையர்களை ஆயுதம் அற்றவர்களாக்கி தன் நாட்டின் வெற்றிக்காக பலியானார் குயிலி. உலகின் முதல் மனித வெடிகுண்டு குயிலியே என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஆங்கிலேயர்களை எதிர்த்து வீரம் செறிந்த பல போராட்டங்கள் தமிழ் மண்ணில் நடைபெற்றுள்ளன. உயிரைத் துச்சமென மதித்து பலர் போராடினர். ஆனால், அனைத்தையும்விட போற்றத்தக்க ஒரு போராட்டத்தை நிகழ்த்தியவர் வேலுநாச்சியார். ஆங்கிலேயர்களிடம், இழந்த தங்கள் நிலம் அனைத்தையும் மீட்ட பெருமை அவருக்கு மட்டுமே உரித்தானது. அதற்கு காரணகர்த் தாவாக விளங்கியவர் குயிலி.

போர்க்களத்தில் இருந்த குயிலி, தன் தாயாருக்கு உடல்நிலை சரியில்லாததால் சிவகங்கைக்குச் செல்லத் திட்டமிட்டார் . இதை அறிந்துகொண்ட வெற்றிவேலு, குயிலிக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்று கருதி, ஒரு கடிதத்தைக் கொடுத்து சிவகங்கை அரண்மனைக்கு அருகே வசித்த மல்லாரிராயன் என்பவரிடம் கொடுக்கச் சொன்னார். வெற்றிவேலின் செயல்பாடுகள்மீது ஏற்கெனவே சந்தேகம் கொண்டிருந்த குயிலி அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்தார். அந்தக் கடிதத்தில் அரசி வேலுநாச்சியாரைக் கொல்வதற்கான திட்டங்கள் விவரிக்கப்பட்டிருந்தன.

வெகுண்டெழுந்த குயிலி, குத்தீட்டியை எடுத்துக் கொண்டு வெற்றிவேலின் இருப்பிடம் சென்று அவரைக் கொன்றார். ஒரு கையில் ரத்தம் வடியும் குத்தீட்டியுட னும், மறுகையில் கடிதத்துடனும் அரசியிடம் சென்று நடந்ததை விவரிக்க, குயிலியின் வீரத்தை வெகுவாகப் பாராட்டினார் வேலுநாச்சியார்.

1780 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 5 ஆம் நாள் தம் பகுதியான சிவகங்கையை மீட்க, விருப்பாச்சியிலிருந்து படையெடுத்துச் சென்றார் வேலுநாச்சியார். பெண்கள் படைக்குத் தலைமையேற்றார் வீரப்பெண் குயிலி.

சிவகங்கை நோக்கி வரும் வழியில் கோச்சடையில் மல்லாரிராயனையும், அடுத்ததாக திருப்புவனத்தில் மல்லாரிராயனின் தம்பி ரங்கராயனையும், மானாம துரையில் மார்டின்ஸ், பிரைட்டன் போன்ற வெள்ளைக் கார அதிகாரிகளையும், நவாப்பின் படைத்தளபதியான பூரிகானையும் கொன்று குவித்து வெற்றியோடு முன்னேறியது குயிலி தலைமையிலான நாச்சியாரின் படை.

வேலுநாச்சியாரின் கணவரான முத்துவடுகநாதரைக் கொன்ற ஆங்கிலத் தளபதி ஜோசப் ஸ்மித்தை காளை யார்கோயிலில் அடித்து துவம்சம் செய்தார்கள். ஆனால், சிவகங்கைக்குள் நுழைவது மட்டும் கடினமாக இருந்தது. காளையார்கோயிலில் இருந்து சிவகங்கை வரை அடிக்கு ஒரு வீரனை நிறுத்தியிருந்தான் ஆங்கிலத் தளபதி பான்சோர் .

யாருக்கும் தெரியாமல் மாறுவேடத்தில் ஊர் நிலை வரம் அறிந்து வந்த குயிலி, நாளை விஜயதசமித் திருவிழா. சிவகங்கையில் உள்ள ராஜராஜேஸ்வரி அம் மன் கோயி லில் கொலு நடைபெறவிருக்கிறது. பெண்களுக்குமட்டுமே அனுமதி நாம் அனைவரும் மாறுவேடத்தில் கோயிலுக்குள் செல்வோம். அங்கிருந்து போரைத் தொடங்குவோம்'' என்று யோசனையை முன்வைத்தாள்.

குயிலியின் யோசனையை அரசியும் ஏற்றுக்கொண் டார். அரசியின் தலைமையில் அனைவரும் மக்களோடு மக்களாகக் கோயிலுக்குள் புகுந்தனர். மருதுபாண்டி யர்களின் தலைமையில் படைவீரர்கள் ஊருக்கு வெளியே காத்துக்கொண்டிருந்தனர். ஆயுத பூஜைக்காக வெள் ளையர்கள் ஆயுதங்கள் அனைத்தையும் கோட்டை யின் நிலா முற்றத்தில் வைத்திருந்தனர். உள்ளே நுழைந் ததுமே அதைக் கண்டுகொண்டார் குயிலி.

சரியான தருணம் பார்த்துக் கொண்டிருந்த அரசியும் பெண்கள் கூட்டம் கலையும் நேரம் கையை உயர்த்தி, 'வெற்றிவேல்! வீரவேல்' என்று முழங்கினார். மாலை களுக்குள் இருந்த வாள் வெள்ளையர்களின் தலையை நோக்கிச் சீறிப்பாய்ந்தது.

ஆபத்தை உணர்ந்த ஆங்கிலேயத் தளபதி பான்சோர் 'சார்ஜ்' என்று கத்தினான். வெள்ளையர்களும் தங்களு டைய ஆயுதக் கிடங்குக்கு ஓடினர். அவர்களுக்கு முன்னே குயிலியும் ஓடினார். அவரது மேனியில் விளக்குக்காகக் கோயிலில் இருப்பு வைக்கப்பட்டிருந்த நெய் வழிந்து கொண்டிருந்தது. தீப்பந்தத்தால் தன்மேல் தீயிட்டுக் கொண்டு ஆயுதக் கிடங்குக்குள் குதித்தார். ஆயுதங்கள் அனைத்தும் வெடித்துச் சிதறின. தன்னையே மாய்த் துக்கொண்டு வெள்ளையர்களின் ஆயுதங்களைத் தீக்கு இரையாக்கினார் குயிலி. மீதமிருந்த வெள் ளையர்களை, நாச்சியாரின் படைவீரர்கள் துவம்சம் செய்தனர்.

ஊர் எல்லையிலிருந்து மருது சகோதரர்களும் கோட்டையை நோக்கி முன்னேறியிருந்தனர். இழந்த நிலம் அனைத்தையும் மீட்டாயிற்று. எங்கே குயிலி? என்று தேடுகிறார் அரசி. தன்னுயிர் தந்து மண்ணுயிர் மீட்டது குயிலிதான் என்பதை அறிந்து அவரின் வீரத்தையும் தியாகத்தையும் கண்டு நெகிழ்ந்து போனார். உலகின் முதல் தற்கொலைப் போராளியானார் வீரப்பெண் குயிலி. வரலாறுகள் இப்போது உண்மை பொய் என இரண்டு வகையில் பிரஸ்தாபிக்கப்படுகிறது – குயிலி என்பவள் ஒரு கற்பனை கதாபாத்திரம் என்று வாதிடு பவர்களும் இங்கே உண்டு – 18 ஆம் நூற்றாண்டு காலத்தில் இந்த வரலாறு செவிவழியாக இன்று வரை வந்து சேர்ந்திருக்கிறது கம்பராமாயணம், மகாபாரதம் போன்று வேலு நாச்சியாரின் வரலாறோடு குயிலியின் வரலாறும் பொறிக்கப்பட்டுள்ளது .

**‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**

# பாட்டும் நானே? பாவமும் நானே!



**1. கேள்வி:** சித்தார்த்தனும் அடைக்கலநாதனும் மீண்டும் ‘குமுறத்’ தொடங்கி இருக்கிறார்களே. கவனித்தீர்களா?

**பதில்:-** ‘பிளீஸ்’ இனிமேல் இந்தக் கேள்வியைக் கேட்டு எனது நேரத்தை வீணடிக்காதீர்கள். திரும்பத் திரும்ப ஒரே பதிலைச் சொல்லிச் சொல்லி எனக்கு அலுத்தே போய்விட்டது. இவர்களை ‘குருவிச்சைகள்’ என்று சம்பந்தனார் நினைக்கிறார். அதனால் கட்சிமரத்தில் ஓர் அளவிற்கு மேல் இவர்களை அவர் படரவிடமாட்டார். இவர்களுக்கும் இதைவிட வசதியாய்ப்படர வேறு இடம் கிடைக்காது என்று தெளிவாய்த் தெரியும். அதனால், இப்படியே ‘குழறிக்குழறிக்’ கொண்டு இவர்கள் இருக்க வேண்டியதுதான். தங்களுக்கான சுதந்திரத்தையே பெற முடியாத இவர்கள்தான், இனத்திற்கான சுதந்திரத்தைப் பெறப்போகிறார்களாம்!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** ‘என்னோடுநீ வந்து மோதாதே, உப்புக்கல் வைரக்கல் ஆகாதே’
சம்பந்தரின் ‘மைண்ட் வொய்ஸ்’

**2. கேள்வி:-** எரிபொருள் விலையேற்றத்திற்காக, எரிசக்தி அமைச்சர் உதயகம்மன்பிலவை இராஜினாமாச் செய்யும்படி பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் சாகரகாரியவசம் திடீரெனக் கேட்டுக் கொள்ள, அமைச்சரோ ஜனாதிபதியினதும், பிரதமரினதும் ஆலோசனைப்படிதான் அந்த விலையேற்றத்தைச்



செய்ததாகச் சொல்கிறார். இப்போது இராஜினாமாச் செய்யவேண்டியது அமைச்சரா? அல்லது ஜனாதிபதியும் பிரதமருமா? முடிந்தால் சரியான பதிலைச் சொல்லும் பார்ப்போம்!



**பதில்:-** வேதாளத்திற்கு மட்டும் இக்கேள்வி தெரிந்திருந்தால், அதனை விக்கிரமாதித்தனிடம் கேட்டு பதில் சொல்ல முடியாமல் பண்ணி, மீண்டும் அது முருங்கை மரத்தில் ஏறியிருக்கும். நமது அரசும் அரசைச் சார்ந்த கட்சிகளும் குழப்பத்தின் உச்சியில் இருப்பதாய்த் தோன்றுகிறது. என்னென்னவோ கனவுகளோடு ஆட்சியைப் பிடித்தார்கள். இன்றைக்கு அந்தக் கனவுகள் எல்லாம் ஒவ்வொன்றாய் இடிந்து விழத் தொடங்கியிருக்கின்றன. இன்றைய நிலையில் ‘கரடியை நான் விடத் தயார் கரடிதான் என்னை விடுகுதில்லை’ என்ற கதைதான் நடக்குமாற்போல் தெரிகிறது. சுருங்கச் சொன்னால், அத்திவாரம் ஆட்டம் காணத் தொடங்கியிருக்கிறது என்பதுதான் முடிவான பதிலாம். ‘அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்’ என்று பௌத்தத் துறவி சும்மாவா சொல்லியிருப்பார்?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** ‘முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்’
கிழவியும் கெட்டிக்காரிதானுங் கோவ்வ்வ்...!

**3. கேள்வி:-** தமிழர் பிரச்சினைத் தீர்வுபற்றிப் பேச, திடீர் என சம்பந்தரை ஜனாதிபதி அழைத்திருக்கிறாரே?

**பதில்:-** சில பெண்களுக்கு புளி மாங்காய் என்றால் பிடிக்கவே பிடிக்காது. பிள்ளைத்தாச்சியானால் அதே மாங்காய் ஏனோ அவர்களுக்குப் பிடிக்கத் தொடங்கிவிடும். பிள்ளை பெற்றதும் மீண்டும் அம் மாங்காய் பிடிக்காமல் போய் விடும். நம் சிங்களத் தலைவர்களும் அப்படித்தான் இருக்கிறார்கள். தமக்குப் பிரச்சினை என்று வந்தால் தான், அவர்கள் கண்களுக்குத் தமிழர் பிரச்சினை தெரியத் தொடங்குகிறது. தம் பிரச்சினை முடிந்ததும் மீண்டும் தமிழர் பிரச்சினையைக் ‘கிடப்பில்’ போட்டு விடுகிறார்கள். சிங்களத் தலைவர்கள்தான் பிள்ளைத்தாச்சிகள். நம் தமிழ்த் தலைவர்கள்தான் மாங்காய்கள். இஷ்டப்படி கையாளவும் விடவும் சடப்பொருளான



மாங்காய் இடம் கொடுக்கலாம். அறிவுள்ள(?) நம் தலைவர்கள் இடம் கொடுக்கலாமா?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** மாங்காய்களா? மாங்காய் மடையர்களா? ‘ச்சொரி ச்சொரி ’
சும்மா சொல்லிப் பாத்தனான்...!

**4. கேள்வி:-** அறம்,அறம் என்று வாய்கிழியப் பேசும் உங்களிடம் ஒன்றைக் கேட்க வேண்டி இருக்கிறது. லட்சக் கணக்கானவர்களை வக்கிரமாகக் கொன்று ஊழிக்கூத்தாடிய உகண்டாவின் முன்னாள் ஜனாதிபதி ‘இடிஅமீன்’, சவுதிஅரேபியாவில் கடைசிவரை எல்லாச் சுகங்களையும் அனுபவித்து இறந்தான். சத்தியத்தை உலகிற்குப் பறைசாற்றி, அகிம்சையைக் கடைசி வரை கடைப்பிடித்து வாழ்ந்த, மகாத்மா காந்தியோ சுடப்பட்டு துடிதுடித்து இறந்தார். இதற்குப் பிறகும் அறம் என்று பேசுவதால் என்ன பயன் ?

**பதில்:-** உங்கள் கேள்விக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, வள்ளுவன் என்கின்ற எங்களது முப்பாட்டக்கிழவர் பதில் சொல்லிவிட்டுப் போய் விட்டார். ‘அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப்படும்’ என்பதே அவர் தந்த பதிலாம். அவரது பதிலைக் கொஞ்சம் விளக்கமாய்ச் சொல்கிறேன்.

நன்மையையோ, தீமையையோ செய்த ஒருவன், தான் செய்த அதே அளவான நன்மையையும் தீமையையும் அனுபவித்தே ஆக வேண்டும் என்பதே, நமது முன்னோர் கூறிய விதிக் கொள்கை. அந்த அனுபவிப்பு, குறித்த ஒரே பிறவியில் நடக்க வேண்டும் என்பதில்லையாம். செய்த பாவ புண்ணியத்திற்கேற்ற பலன்களை ஏதோ ஒரு பிறவியில் அவ்வுயிர் அனுபவித்தே ஆகும் என்கிறார்கள் அவர்கள்.

செய்த பாவ புண்ணியத்திற்கு அந்தந்தபிறவியிலேயே பலன் கிடைக்கவேண்



டும் என்று நாம் நினைக்கிறோம். அதனால்தான் உங்களிடம் இந்தக் கேள்வி எழுந்தது. மேற்சொன்ன உண்மையைத் தெளிவுற உணர்ந்த வள்ளுவர், தீயவன் ஒருவனுக்கு நல்வாழ்வும், நல்லவன் ஒருவனுக்குக் கேடும் விளைகையில், இது இவர்களின் விதியால் நடந்தது என,



உயர்ந்தவர்கள் நினைப்பார்கள் என்கிறார்.

‘பேஸ்புக்’ என்றும் ‘யூடியூப்’ என்றும் தேவையில்லாதவற்றுக்கெல்லாம் அதிக நேரம் செலவழிக்கும் நீங்கள் நம் வள்ளுவக் கிழவரையும் கொஞ்சம் படித்துப் பார்க்கலாமே!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** ’தற்ஸ் ரூ’ காமத்துப்பாலும் இருக்கிறதால் படிக்கலாம்தான்.
ஹி ... ஹி....

**5. கேள்வி:-** காமமும் காதலும் இல்லாமல் மனிதனால் வாழ முடியுமா?

**பதில்:-** மனிதனால் மட்டும் என்று இல்லை உயிருள்ள எந்த ஜீவராசிக்கும் அது முடியாத காரியம் என்பது திண்ணம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** வாரிதியார் ஆழம் தெரியாமல் காலை வி..ட்...டு...ட்...டா..ர்!

**6 கேள்வி:-** ‘அமெரிக்க’ ஜனாதிபதியும் ‘ரஷ்ய’ ஜனாதிபதியும் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றியாய் முடிந்திருக்கிறதாமே? வல்லரசுகளின் இந்த இணக்கப்பாட்டால் உலகிற்கு ஏதாவது நன்மை நடக்குமா ?

**பதில்:-** உலகிற்கு நன்மை நடக்கிறதோ இல்லையோ ? இவர்களை வழிமொழிந்து அணிசார்ந்து நின்ற நாடுகளுக்கு விழிபிதுங்கப் போகிறது. போட்டி போட்டுக் கொண்டிருந்த இரு பகையாளிகள் காரணமின்றித் திடீரென ஒன்று சேர்கிறார்கள் என்றால், மூன்றாவது சக்தி ஒன்று பலம்பெறத் தொடங்கிவிட்டது என்பதுதான் அர்த்தம். அது எந்த சக்தி என்று இப்போதுதான் எல்லோருக்கும் தெரியத் தொடங்கியிருக்கிறது. தனது எதிரி நாட்டைக் கடந்து வந்து அதன் எல்லையில் இருக்கும் நமது சிறிய நாட்டில் கூட காலூன்றிவிட்ட அந்த சக்தியின் பலத்தை, நம்மால் ஓரளவு ஊகிக்க முடிகிறது. இந்த உண்மை தெரியாமல் நம்மவர்கள் வலியப் போய் அதன் பிடிக்குள் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுகிறதோ ?

**6. கேள்வி:** இந்த வாரத்தில் மீண்டும் கொரோனாக்கிருமி புதிய வடிவெடுத்திருக்கிறதாமே? இந்த உலகம் தப்பிப் பிழைக்குமா?

**பதில்:-** ‘இந்த, மாறுபடும் சூரனை வதைக்குமுகம் வருமா? எல்லோர் மனதிலும் இப்போது விஸ்வரூபம் எடுத்திருக்கும் கேள்வி இது. நிச்சயம் வரும் என்பதே பதிலாம். எப்படித்தெரியும் என்கிறீர்களா? இருள் வந்தால் ஒளியும், மாரி வந்தால் கோடையும் வருவது தவிர்க்க முடியாத இயற்கை நியதி. எனவே இதற்கும் முடிவு வரும். எப்போது வரும் என்று மட்டும் என்னிடம் கேட்காதீர்கள்!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** ‘கூறும் அடியார்கள் வினை’ தீருமா ?

**7. கேள்வி:-** என்ன ஐயா! உங்களது கம்பன் கழகத்தின் ஐஸ்வர்ய லஷ்மி கோவிலில் சுவாமிக்கு மக்களே பால் வார்க்கிறார்களாமே? அதை நமது சமயம் ஏற்றுக் கொள்ளுமா?

**பதில்:-** உங்கள் கேள்வி புரியவில்லை. இங்கே மக்கள் பால் வார்க்கிறார்கள் என்றால் மற்றைக் கோயில்களில் பால் வார்ப்பவர்கள் மக்களில்லையா? ஐயர்மார்களிடம் நீங்கள் வீணாய் அடி வாங்கப் போகிறீர்கள். உங்களுக்கு ஒன்று தெரியுமா? நமது சைவசமய புராணங்களில், மக்கள் மட்டுமல்ல விலங்குகளும் லிங்கத்திற்குப் பால்வார்த்தும் பூசைசெய்தும்



உயர்வடைந்திருப்பதாய்ப் சொல்லப்படுகிறது. அவற்றையும் வழிபடவிட்டால் என்ன என்றுதான் இப்போது நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கின்றோம். உங்களிற்கு ஏதாவதுவழி தெரிந்தால் சொல்லுங்களேன்! இவற்றை எல்லாம் சமயம் ஏற்றுக் கொள்கிறதோ இல்லையோ? இறைவன் நிச்சயம் ஏற்றுக் கொள்வான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** அதுகளுக்கும் ரிக்கற் போடுவினம் போல. ஹி.....ஹி....

காலைக்கதிர் Kalaikkathir

# ஜூன் 21 பயணத் தடை தளர்வு; 23 இரவு மீண்டும் அமுல்

## 25 ஆம் திகதி அதிகாலை மீளவும் நீக்கம்



**இலங்கையில் தற்போது அமுலில் உள்ள பயணத் தடை தொடர்பில் புதிய அறிவிப்பொன்றைக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று வெளியிட்டுள்ளார்.**

**அதன்படி நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத் தடை எதிர்வரும் 21ஆம் திகதி அதிகாலை 4 மணியுடன் தளர்த்தப்படுகின்றது என அவர் அறிவித்துள்ளார்.**

அதேநேரம் எதிர்வரும் 23ஆம் திகதி இரவு 10 மணி முதல் 25ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையில் மீண்டும் பயணத் தடை அமுலாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், பயணத் தடை தளர்த்தப்படும்போதும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடானது தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, உறவினர், நண்பர்கள் வீடுகளில் ஒன்றுகூடுவதற்கான தடையும் தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

அத்துடன், கடற்கரைகள், பூங் காக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் ஒன்றுகூடவும் தடை விதிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று திருமண நிகழ்வுகள், பொதுக் கூட்டங்கள் உள்ளிட்டவற்றுக்கான தடையும் தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

### மாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த பெண் நேற்று அதிகாலை கட்டார் நோக்கிப் புறப்பட்ட விமானத்தில் பயணிக்க கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு – குடியகல்வு அதிகாரிகளிடம் தனது ஆவணங்களை ஒப்படைத்துள்ளார்.

அவற்றை அதிகாரிகள் பரிசோதித்த போது , அவை போலியான ஆவணங்கள் என்பதனைக் கண்டறிந்து அப்பெண்ணைக் கைதுசெய்துள்ளனர்.

குறித்த பெண் சமர்ப்பித்த ஆவணங்களில் பி.சி.ஆர். பரிசோதனை ஆவணமும் போலியானது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

---

### ரணில் நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்ட மொத்த வாக்குகளின் அடிப்படையில் அக்கட்சிக்குக் கிடைக்கப் பெற்ற ஒரேயொரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமைக்கு ரணில் விக்கிரமசிங்கவைப் பெயரிட்ட ஆவணம் கடந்த புதன்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தநிலையில், அவரது பெயரைத் தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவரது பெயர் நேற்று வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

அவர் எதிர்வரும் 23ஆம் திகதி நாடாளுமன்றில் சபாநாயகர் முன்னிலையில் எம்.பியாகப் பதவியேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

---

### குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பண்டத்தரிப்பு பகுதியில் கடந்த 4ஆம் திகதி சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தல்களை மீறி நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தனிமைப் படுத்தப்பட்டனர்.

அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டிருந்த 78 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் 13 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து குறித்த 13 பேரும் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மணமக்கள் குடும்பத்தினர் மேலும் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

---

# சொகுசு வாகனங்களை மக்களுக்காக அர்ப்பணித்து பௌத்த தேரர்கள் முன்மாதிரியாக நடக்க வேண்டும்

## மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்து

வண. எல்லே குணவன்ஸ தேரர், நாடாளுமன்ற உறுப்பினர் கள் தமது சம்பளத்தை பொது காரியங்களுக்காக அர்ப்பணிக்க வேண் டும் எனக் கூறுகிறார். இது நல்ல யோசனை. ஆனால், அதற்கு முன், இந்நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த எல்லா அரசுகளும், தேரர் களை தம்வசம் வைத்துக்கொள்ள, வழங்கிய பென்ஸ், ரேஞ்ரோவர், டொயோடா போன்ற சொகுசு வாகனங்களையும், ஆலய சொத்துக் களையும், வரப்பிரசாதங்களையும், பொதுக்காரியங்களுக்காக வழங்கி, பிரபல வண. தேரர்கள் தான் முன்மாதிரியாக இந்த பணியினை ஆரம்பித்து வைக்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது பற்றி மனோ எம்.பி. மேலும் விவரித்து கூறியுள்ளதாவது:–

வண. எல்லே குணவன்ஸ தேரர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சம்பளத்தைப் பொது காரியங்களுக்காக அர்ப்பணிக்க வேண்டும் எனக் கூறுகின்றார். நல்லது. ஆனால், உண்மையில் எனக்கு வண. தேரர்கள் இதைப் போதிக்கத் தேவையில்லை.

1999ஆம் ஆண்டில் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டதில் இருந்து எனக்கு கிடைக்கும் சம் பளம், கொடுப்பனவுகள் எல்லாவற்றையும் நான் பொது காரியங்களுக்காகவே தொடர்ந்தும் அர்ப்பணித்துள்ளேன். அது மட்டுமல்ல, எனது கடும் சொந்த உழைப்பினால் நான் தேடிப்பெற்ற பெறுமதியான சொத்துக்களையும், பொது காரியங்களுக்காகவே விற்று செலவழித்துக்கொண்டு இருக்கின்றேன்.

நான் ஒருபோதும் பொது சொத்தை திருடியவன் கிடையாது. ஏனெனில், எனக்குத் திருடத்தெரியாது. இவை தான் என் தந்தை எனக்குச் சொல்லித்தந்து விட்டுப் போன பாடங்கள். விட்டுத்தந்த மிகப் பெரிய சொத்துகள். என் தந்தையை விட, எனக்கு வழிக்காட்ட பெரிய மதத்தலைவர் என்று எவருமில்லை.

ஆனால், இந்நாட்டின் இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மதத் தலைவர்களை விட, விசேட அந் தஸ்த்து வழங்கப்பட்டுள்ள மிகப்பல பௌத்த தேரர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன்.

இந்நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த எல்லா அரசுகளும், உங்களைப் போன்ற தேரர்களைத் தம்வசம் வைத்துக் கொள்ள, வழங்கிய பென்ஸ், ரேரோவர், டொயோடா போன்ற சொகுசு வாகனங்கள், சொகுசு வசிப்பிடங்கள் உட்பட்ட வசதிகளையும், வரப்பிரசாதங்களையும் பொதுமக்களுக்காக அர்ப்பணியுங்கள். ஆலயங்களுக்குச் சொந்தமான சொத்துக் களையும், பொதுக்காரியங்களுக்காக வழங்கி இந்தப் பணியை ஆரம்பித்து வையுங்கள்.



கௌதம புத்தன் போதித்ததைப் போன்று, கொலை இல்லை, திருட்டு இல்லை, பணம் இல்லை, பாலியல் உறவு இல்லை, பொய் இல்லை, போதைப் பொருள் இல்லை, மதிய உணவுக்குப் பிறகு சாப்பாடு இல்லை, நடனம், இசை இல்லை, நகைகள், ஒப்பனைப் பொருள்கள் இல்லை, எழுந்த படுக்கையில் தூக்கம் இல்லை என்ற பௌத்த துறவியின் எளிய துறவு வாழ்க்கையை வாழ உங்களால் முடியாவிட்டாலும் பரவாயில்லை.

தேரர்களாகிய நீங்கள், இன – மதவாத அரசியல் இல்லை என்று வாழ்ந்தாலே போதும். இந்நாடு உருப்படும். நாளாந்தம் கொடுமைகளின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் அப்பாவி தமிழ், முஸ்லிம் மற்றும் அப்பாவி ஏழை சிங்கள மக்களும் உங்களைப் போற்றி வணங்குவார்கள் – என்று குறிப்பிட்டுள்ளார்.

---

# 150 அடி பள்ளத்தில் பஸ் விழுந்து விபத்து; சாரதி பரிதாப மரணம்!



பலாங்கொடை – ராசாகலை வீதியில் எல்லேவத்த பகுதியில் 150 அடி பள்ளத்தினுள் பஸ் விழுந்து விபத்துக்குள்ளானதில் சாரதி உயிரிழந்துள்ளார்.

தேயிலை தொழிற்சாலை ஊழியர்களை வீடுகளில் இறக்கிவிட்டுத் திரும்பும்போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்றபோது பஸ்ஸினுள் சாரதி மாத்திரமே இருந்த நிலையில் விபத்தில் அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.